
# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 6 ஜனவரி - மார்ச் 2000 இதழ் 1



# திருமறைத்தீபம்

**Issue No. 1 of 2000**

ISBN 1173-7255


காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. வேதசத்தியங்களை எடுத்துரைத்து கிருபையின் தேவனை மகிமைப் படுத்துவதே பத்திரிகையின் தலையாய நோக்கம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.


**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Telphone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email:** bala@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org


**கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.**

*- சி. எச். ஸ்பர்ஜன் -*
*1884-1892*

இரண்டாயிரம் ஆண்டுகள் முடிந்து 21 ஆவது நூற்றாண்டில் நாம் காலடி எடுத்து வைத்துள்ளோம். எக்காலத்திலுமில்லாதவகையில் கடந்த நூறு ஆண்டு காலப்பகுதிகளில் உலகில் பிரமிக்கத்தக்க விதத்தில் துரித கதியில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கணனித்துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் மனிதன் மின்னல் வேகத்தில் முன்னேற்றம் கண்டுள்ளான். தொலைபேசி, தொலை நோக்கி, கணனி மூன்றும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தொடர்புச் சாதனத்துறையில் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு நாடுகளுக்கிடையில் உள்ள தூரம் குறுகி உலகம் மிகச்சிறிது என்று எண்ணும் வகையில் செய்திப் பரவல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.


இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ள அதேவேளை "மாற்றம்" என்ற வார்த்தைக்கே பொருள் தெரியாது அன்றாடக் கஞ்சியில் தன் னிறைவு கண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் மானுடர்களும் இதே உலகின் பல பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உலகத்தை இதுவரை எதுவும் பாதித்திருப்பதாகத் தெரியவில்லை. இவர்களுடைய வாழ்க்கையில் அன்றாடம் y2k.

இத்தனைக்கும் மத்தியில் இந்த உலகிற்கு அப்பால் ஒரு வாழ்வு உண்டு; அவ்வாழ்வை அடைய இறைமகன் இயேசுவின் கிருபையால் விசுவாசத்தை அடைய வேண்டும் என்ற வேதபோதனையைக் குறித்து சிந்தித்துப் பார்ப்பவர்கள் எத்தனை பேர்! இவ்வுலகும், அதன் சுகங்களுமே கதி என்று விடாப்பிடியாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்கள் பிரமித்துக் கலங்கப்போகும் நியாயத்தீர்ப்பு நாளும் இத்தனை மாற்றங்களுக்கு மத்தியிலும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது என்ற எண்ணம் பலருக்கு எழுவதில்லை.

இறைமகன் இயேசுவை விசுவாசித்து, அவருக்காக மட்டுமே வாழ்ந்து, அவரைப்பற்றி மானுடம் அறிந்து கொள்ளும் அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டு, கிறிஸ்து நேசிக்கும் சபையில் கிறிஸ்தவ ஐக்கியத்தின் சுகம் கண்டு வாழும் பெருங்கடமைக்காக நம்மை அழைத்திருக்கும் தேவனை இந்நூற்றாண்டில் மகிமைப்படுத்த நாம் முன்வருவோம். கண்ணுக்கும், காதுக்கும், சரீர உணர்ச்சிக்கும் மட்டும் விருந்தளிக்கும் கேளிக்கை கிறிஸ்தவத்தின் கையில் பிடிபடாமல் வேத சத்தியங்களில் மட்டும் ஊன்றித்திளைத்து, அவற்றில் பேரறிவுபெற்று மெய்க்கிறிஸ்தவர்களாக நாம் வாழ முயல்வோம். லூதரும், கல்வினும், நொக்ஸும், பனியனும், ஸ்பர்ஜனும் பிரசங்கித்த சத்தியத்தின் அடிப்படையில் மட்டுமே அமைந்த சபைகளை நாடிப்போய் அங்கே நல்வாழ்வு பெறுவோம்.

"கிறிஸ்தவர்" என்ற போர்வையில் மறைந்து வாழும் போலிகள் அழிந்து, பணத்திற்காக சுவிஷேசத்தைப் பயன்படுத்தி மக்களை சீரழிக்கும் மனிதர்கள் மறைந்து, சீர்திருத்தப் போதனைகளும், சபைகளும் இந்நூற்றாண்டில் தமிழர் மத்தியில் வளர்ந்து, வாழ்ந்து, உயர்ந்திட நம் தேவன் நமக்குக் கருணை காட்ட ஒன்று கூடி வைராக்கியத்துடன் ஜெபிப்போம். திருமறைத்தீபத்தை வாசிப்பதோடு நின்றுவிடாமல் அதன் போதனைகளின்படி வாழ்ந்து, வளர்ந்து, மற்றவர்களையும் வளர்த்து நம் தேவனை மகிமைப்படுத்த முன்வருவோம்.

*– ஆசிரியர்*



*இன்று சிதைந்து, சீரழிந்து கொண்டிருக்கும் குடும்பத்தைப் பிடித்துள்ள சாபக்கேட்டிலிருந்து அதை விடுவிப்பதெப்படி? இதற்கான வேதபூர்வமான விளக்கத்தை இத்தொடர் அளிக்கிறது.*

# குடும்பத் தலைவன்

குடும்பம் பல அங்கத்தவர்களைக் கொண்டது. கணவன், மனைவி, பிள்ளைகள் என்று அமைந்துள்ள குடும்பம் நல்ல நிலையில் சீராக வாழ்ந்து வளர வேண்டுமானால் அது ஒழுங்காக ஓடும் நீரோடைபோல் கட்டோடு, அமைதியாக ஓட வேண்டும். கட்டுப்பாட்டோடும், கண்ணியத்தோடும் குடும்பம் இருக்க அதற்கு ஒரு தலைமை அவசியம். தலை இல்லாமல் சரீரம் இருக்க முடியாது. இதற்காகவே குடும்பத்தை ஏற்படுத்திய தேவன் அதற்குத் தலைமை அவசியம் என்பதால் கணவனுக்கு குடும்பத்தை நடத்தும் தலைமைப் பொறுப்பை அளித்துள்ளார். இது மனிதன் ஏற்படுத்திக்கொண்ட ஒரு வசதி அல்ல. இன்று கணவனுக்குச் சொந்தமான இத்தலைமைப் பொறுப்பைக் குறித்து கிறிஸ்தவர்கள் மத்தியில் அதிக விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. முக்கியமாக மேலை நாட்டுக் கிறிஸ்தவர்கள் மத்தியில் பெண்ணுரிமை சார்பான இறையியலாளர்கள் தேவன் ஏற்படுத்தியுள்ள கணவனுக்குச் சொந்தமான இத்தலைமைப் பொறுப்பிற்கு புது விளக்கம் கொடுத்து வருகிறார்கள். இது வெறும் விவாதப் பொருளாக மட்டும் அமையாமல் ஆண், பெண் உறவிலும், கணவன், மனைவி உறவிலும், குடும்ப வாழ்க்கையிலும், சபை வாழ்க்கையிலும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறு மேலைநாட்டுக் கிறிஸ்தவர்களை பாதித்துள்ள பெண்ணுரிமை சார்பான இறையியல் நம்மைத் தொட்டுள்ளதா? என்று கேட்டால், நமது கலாச்சாரம் அதற்கு இதுவரை இடமளிக்காவிட்டாலும் அதன் சாயல்களை கிறிஸ்தவ சபைகளில் காண முடிகின்றது என்றே கூறவேண்டும். கணனி, இணையம், தொலைநோக்கி ஆகியவை உலகத்தை சிறிதாக்கி வரும் நாட்களில் இதுவும் இனிவரப்போகும் புதுப் புது இறையியல் விளக்கங்களும் நம்மை நிச்சயம் தொடத்தான் போகின்றன. கலாச்சாரக்குகைக்குள் இருந்து இனியும் நாம் குளிர்காய முடியாது. அது மட்டுமல்லாமல் குடும்பத் தலைமைப் பொறுப்பு பற்றிய போதனையை நாம் இதுவரை காலாச்சார நோக்கில் மட்டும் ஏற்றுக் கொண்டு, நடைமுறையில் எதேச்சாதிகார முறையிலேயே வீட்டில் நடந்து வந்துள்ளோம். அதாவது, குடும்பத் தலைமை என்றால் என்ன என்று வேதம் போதிக்கும் விதத்தில் நடந்து கொள்ளாது அப்போதனைகளை மீறி ஆதிக்கத்துடன் நடந்து வரும் குடும்பத்தலைவர்கள்தான் குடும்பங்களில் அதிகம். ஆகவே, குடும்பத் தலைமை பற்றி வேதம் என்ன போதிக்கிறது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

## வேதம் போதிக்கும் குடும்பத் தலைமை

கடந்த இதழிலும், அதற்கு முன்னைய இதழிலும் குடும்பத்தின் தோற்றத்தைப்பற்றி வேதம் போதிக்கும் உண்மைகளை ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களில் விளக்கமாகப் பார்த்தோம். அவ்வதிகாரங்களே சிருஷ்டியில் குடும்பம் எவ்வாறு தோற்றுவிக்கப்பட்டது என்ற விளக்கங்களைத் தருகின்றன. அங்கேயே குடும்பத் தலைமை பற்றிய உண்மைகளையும் நாம் பெற்றுக் கொள்கிறோம்.

ஆதியாகமம் முதல் மூன்று அதிகாரங்களும் மிகத் தெளிவாக குடும்பத்தைத் தலைமை தாங்கும் பொறுப்பைத் தேவன் கணவனுக்கே கொடுத்திருக்கிறார் என்று தெரிவிக்கின்றன. முதலில் ஆணைப்படைத்த தேவன் பின்பு பெண்ணை ஆணுக்குத்துணையாயிருக்கப் படைத்தார் (ஆதி 1:26-27; 2:18-25). ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தபின் கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டே முதலில் அதற்கு விளக்கம் கேட்டார் (ஆதி. 3:9). கர்த்தர் ஆதாமையும், ஏவாளையும் அவர்கள் செய்த பாவத்திற்காகத் தண்டித்தபோது, ஏவாளைப் பார்த்து, “உன் ஆசை உன் புருஷனைப்பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டு கொள்வான்” என்றார். இது ஆங்கில வேதத்தில் *Your desire shall be for your husband, And he shall rule over you* என்றிருக்கிறது. இவ்வார்த்தைகளை நாம் ஊன்றிக்கவனிக்க வேண்டும். இங்கே ஏவாளின் ஆசை அல்லது *desire* என்பது, அவள் கணவன் மேல் இனி அன்பு செலுத்துவாள் என்ற பொருளில் அமையவில்லை. அவள் ஏற்கனவே ஆதாம் மீது அன்பு வைத்திருந்தாள். ஆகவே, இதை மறுபடியும் கர்த்தர் இங்கே வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. இப்பதங்கள், ஏவாள் தன் கணவனின் தலைமைத்துவத்திற்கு மதிப்பளிக்காமல் பிசாசின் வார்த்தைகளைக் கேட்டதால், அவள் தொடர்ந்து தன் கணவனின் தலைமைத்துவத்தை நாடும் பாவத்தைச் செய்வாள் என்ற பொருளிலேயே அமைந்துள்ளன.

அடுத்ததாக, “அவன் (ஆதாம்) உன்னை ஆண்டு கொள்வான்” என்று கர்த்தர் ஏவாளைப் பார்த்துக் கூறினார். ஏற்கனவே குடும்பத்தை ஆளும் பொறுப்பு ஆதாமுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவன் பாவம் செய்தபின் இப்பொறுப்பைத் தண்டனையாக கர்த்தர் எப்படி வர்ணிக்க முடியும்? ஆகவே, இங்கேயும் உட்பொருள் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அதாவது, கர்த்தர் ஆதாமைப் பார்த்து, “குடும்பத்தை ஆளும் பொறுப்பை உனக்குக் கொடுத்திருந்தேன். ஆனால் அதை நீ முறையாக செய்யவில்லை. உன் மனைவி

இனி அதை உன்னிடம் இருந்து பறிக்கும் ஆசை யுடையவளாயிருப்பாள். நீ அவளை இனி அன்போடு ஆளாமல், அடக்கி ஒடுக்கும் அதிகாரத்துடன் ஆள முயல்வாய்" என்று கூறுகிறார். இப்பொருளிலேயே இவ்வார்த்தைகள் அமைந்துள்ளன. ஆதாமும், ஏவா ளும் செய்த பாவம் கர்த்தர் ஏற்படுத்தித் தந்திருந்த குடும்ப உறவுக்கு எதிராக நடந்து கொண்டதே. ஆகவே, அவர்கள் செய்த பாவம் இவ்விதமாகத் தொடர்ந்து குடும்பத்தில் பிரச்சனைகளை ஏற்படுத் தும் என்பதைக் கர்த்தர் உணர்த்துகிறார். இதனால் தான் குடும்பங்கள் சிருஷ்டியில் ஏற்படுத்தப்பட்டி ருந்த விதத்தில் இன்று வாழ முடியாமல் அவதிப்படு கின்றன.

ஆகவே, இவ்வேதப்பகுதி கர்த்தர் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் கொடுத்த தண்டனையை மட்டுமன்றி ஆரம்பத்தில் கர்த்தர் அவர்கள் எந்தப்பொறுப்பு களைச் சுமந்து குடும்பமாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தாரோ அவற்றையும் நினைவுறுத்துகின்றது. அதாவது, ஆதாம் குடும்பத்தை ஆள்பவனாக வும், ஏவாள் அவனுக்கு அமைந்து நடப்பவளாகவும் இருக்க வேண்டு மென்பதே கர்த்தரின் கட்டளை யாக இருந்தது. ஆகவே, குடும் பத்தை ஆள்பவனாக கணவனே இருக்கிறான். ஆனால், ஒரு கணவன் குடும்பத்தை எப்படி ஆள வேண்டும்? பாவத்தின் காரணமாக ஒவ்வொரு கணவனும் தன் மனைவியை அடக்கி ஒடுக்கி அதிகாரம் செலுத்தும் நிலையி லேயே இன்று இருக்கிறான். இது கர்த்தர் அவனுக்கு அளித்துள்ள தண்டனை. இயற்கையாகவே அவனால் உண்மையான வேத பூர்வமான குடும்பத்தலைவனாக இருக்கமுடியாது. கிறிஸ்துவை அறிந்து கொண்ட பின்பே அவனது தண்டனையின் பாரம் குறைந்து அவனால் உண்மையான குடும்பத்தலைவனாக இருக்க முடியும். ஒரு கிறிஸ் தவக் கணவன் எப்படிப்பட்ட குடும்பத் தலைவனாக இருக்க வேண்டும்?

> வீட்டை ஓட்டலாகக் கருதும் கணவனால் கிறிஸ்தவக் கணவனாக இருந்து குடும்பத்தை ஆள முடியாது.

## குடும்பத்தை ஆளும் கணவன்

கிறிஸ்தவக் கணவன் குடும்பத்தை ஆள்பவனாக இருக்க வேண்டும் (எபேசி. 5:23). அதாவது, குடும் பத்தை நடத்தும் பொறுப்புகளைச் சுமந்து, குடும் பத்தை நல்ல வழியில் நடத்த வேண்டியதற்கான தீர்மானங்களை எடுத்து அவற்றை நிறைவேற்ற வேண்டும். இத்தகைய தீர்மானங்களை எடுக்கும் போது நிச்சயம் அவன் தன் மனைவியையும் அதில் சம்பந்தப்படுத்தி, அவளது ஆலோசனைகளையும் கேட்டுப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தலை யணை மந்திரம் கேட்பவன் என்ற கெட்ட பெயர் எடுக்கக்கூடாது. மனைவியை எல்லாம் செய்யவிட்டு, எந்த முடிவும் எடுக்கத் தைரியமில்லாமல் செயலிழந் தவனாக இருக்கக் கூடாது. எந்தத் தீர்மானத்தையும் தான்தோன்றித்தனமாக எடுத்து குடும்பத்தைத் துன்பத்தில் ஆழ்த்தக் கூடாது. எடுக்கும் தீர்மானங் கள் அனைத்தையும் குடும்பத்தின் நன்மையைக் கருத்தில் கொண்டே எடுக்க வேண்டும். பிள்ளைகள் இருந்தால் அவர்களை வளர்ப்பதில் அவனுக்குப் பெரும் பங்குண்டு. தன் ஆளுகைக்குள் குடும்ப அங் கத்தவர்கள் கட்டுப்பட்டு நடக்கும் விதமாக அவனது ஆளுகை அமைய வேண்டும். பிள்ளைகளைக் கட்டுக் குள் வைத்து வளர்க்க முடியாதவர்கள் சபை ஊழி யத்திற்குத் தகுதியற்றவர்கள் (1 தீமோத்தேயு 3) என்று வேதம் போதிக்கின்றது.

வீட்டை ஆள்பவன் கணவனாதலால் அவன் வீட்டில் இருப்பது அவசியம். கிறிஸ்தவக் கணவன் வீட்டுக்கு வெளியில் அதிக நேரத்தையும், காலத்தையும் செல விடுவது ஆபத்தை விலைக்கு வாங்குவதாகும். வீட்டுப் பொருளாதார நிலை அப்படி இருக்கிறது என்றும், கர்த்தரின் ஊழியம் அழைக்கிறது என்றும் வீட்டை யும், மனைவி, பிளைளைகளையும் விட்டுவிட்டு எங்கோ போய்விடுபவர்களுக்கு குடும்பம் தேவை யில்லை. அவர்களால் வேதபூர்வமாக குடும்பத்தை ஆள முடியாது. அன்றாடம் குடும் பத்தலைவனைக் காணாத வீட்டில் வளரும் பிள்ளைகள் எப்போதுமே கட்டுக் கடங்காமல் போய்விடு கிறவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுக்கு தகப்பனின் அன்பும் தெரியாமல் போய்விடுகிறது.

மனைவியின் ஆன்மீக, சரீரத் தேவைகளை நிவைவேற்றி ஆள கணவன் குடும்பத்தில் இருப்பது அவசியம். அத்தோடு குடும்பத் தலைவனின் தேவைகளை மனைவி நிறைவேற்றி வைக்கவும் கணவன் வீட்டில் இருத்தல் அவசியம். கட்டிய மனைவியை விட்டுவிட்டு மாதக்கணக்காக வீட்டுக்கு வெளியில் இருப்பது திருமண வாழ்க்கைக்கு ஒவ்வாது. வீட்டை ஓட்டலாகக் கருதும் கணவனால் கிறிஸ்தவக் கணவ னாக இருந்து குடும்பத்தை ஆள முடியாது.

## அன்பு காட்டும் கணவன்

கணவன் குடும்பத்தை ஆள்பவனாக இருந்தபோதும் அவன் மனைவி மீது அன்பு செலுத்துபவனாக இருக்க வேண்டும். பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் கணவர்களைப் பார்த்து, உங்கள் மனைவி மேல் அன்புகூற வேண்டும் என்று கூறுகிறார். இங்கே பவுல், மனைவியை ஆளுங்கள் என்று கூறாமல் அன்பு கூறுங்கள் என்று மட்டும் கூறுவதற்குக் காரண மென்ன? கிறிஸ்தவரல்லாத கணவர்களுக்கு பாவத் தின் காரணமாக மனைவிமாரை வேதபூர்வமாக ஆள முடியாமலிருக்கிறது. ஆனால், கிறிஸ்தவக் கணவனால் மட்டுமே கிறிஸ்து நேசிப்பதுபோல் தனது துணை வியை ஆழமாக நேசிக்க முடியும். உங்கள் சொந்த சரீரத்தைப் போல் மனைவியை நேசியுங்கள் என்று பவுல் கூறுகிறார் (எபேசி. 5:28). கணவன் குடும்பத்தை ஆள்வதற்காகப் படைக்கப்பட்டவன் என்பது பவுலுக் குத் தெரிந்திருந்தபோதும் கிறிஸ்தவக் கணவன் தன் மனைவியை அன்போடு ஆளவேண்டு மென்பதற் காகத்தான் இங்கு அன்பை மட்டும் பவுல் குறிப்பிட் டுப் பேசுகிறார்.

ஆள்வதற்கும், அன்புக்கும் தொடர்பில்லை என்று எண்ணிவிடக்கூடாது. தலைமைத்துவமும், ஆளுமையும் அன்பின் அடிப்படையிலேயே எப்போதும் அமைய வேண்டும். கிறிஸ்துவை நேசிக்காத ஒரு மனிதனுக்கு இது புரியாது. இது கிறிஸ்தவனால் மட்டுமே முடிந்த காரியம். ஆகவேதான் பவுல் கிறிஸ்து தன் சபையை எப்படி நேசிக்கிறாரோ அதே போல் கணவன் தன் மனைவி மேல் அன்புகூற வேண்டும் என்று போதிக்கிறார் (எபேசியர் 5:23; 25-29; கொலோ. 3:19). இங்கே பவுல் இதைக் கட்டளையாகக் கொடுக்கவில்லை. இதை ஒவ்வொரு கிறிஸ்தவக் கணவனிடமும் அவர் எதிர்பார்க்கிறார்.

தன் மனைவியை நேசிக்கும் கணவன் அவளது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி வைப்பதில் பெரிதும் அக்கறை எடுப்பான். அவளுடைய மனம் கோணாமல் நடந்து கொள்வதில் கவனம் செலுத்துவான். அவளுடைய தவறுகளை அன்போடு திருத்துவான். அவளுடைய நல்ல ஆலோசனைகளை அன்புடன் கேட்பான். சமைப்பதும், பிள்ளை பெறுவதும்தான் அவளுடைய பணி என்று சமுதாயம் பெண்களை நடத்துவது போல் கிறிஸ்தவக் கணவன் தன் மனைவியை நடத்த மாட்டான். தன்மனைவி மேல் வைத்திருக்கும் அன்புக்குத் தடையாக எதையும் வரவும் விடமாட்டான்.

## பராமரிக்கும் கணவன்

கணவன் குடும்பத்தின் தலைவனானதால் அவனே வீட்டுத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு உழைத்து ஊதியம் பெறவேண்டும். சபையின் தேவகளனைத்தையும் நிறைவேற்றும் கிறிஸ்துவைப்போல் மனைவியின் தேவைகளை நிறைவேற்றி வைக்க வேண்டியது கணவனின் கடமை. மனைவிக்கு உணவும், உடையும் வழங்க வேண்டியது கணவனின் கடமை. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் இது கணவனின் அடிப்படைக் கடமையாக சுட்டிக் காட்டப்படுகிறது. இதில் தவறுகிறவன் கிறிஸ்தவக் கணவனாக இருக்க முடியாது. வீட்டு வேலை செய்வதற்கும், சமையல் கட்டுக்கும் தான் மனைவி என்று இருந்துவிடக் கூடாது. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும் அடுக்களையில் வேலை செய்வது அவமானம் என்று கருதும் வீட்டுத் தலைவர்கள் இருக்கிறார்கள். இந்த நிலை மாறி மனைவிக்கு அடுக்களையிலும் துணை செய்யும் மானமுள்ள கிறிஸ்தவக் கணவர்களாக நாம் இருக்க வேண்டும். மனைவியை நேசிப்பவனுக்கு இது மானக்கேடாகத் தெரியாது.

மனைவியின் சரீரத் தேவைகளையும் கணவன் நிறைவேற்றி வைக்க வேண்டும். இதைக்குறித்து கடந்த இதழில் விபரமாக எழுதினோம். பிள்ளை பெறும் இயந்திரமாக மட்டும் மனைவியைக் கணவன் பயன்படுத்தக் கூடாது. பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதும் முக்கிய கடமையாக இருந்தபோதும் பாலுறவில் மனைவியின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதும் கணவனின் முக்கிய கடமையாகும். அது மட்டுமல்லாது கணவன் தன் மனைவியில் மட்டுமே பாலுறவின்பத்தை அனுபவிக்க வேண்டும். அவன் மனதாலோ, அல்லது வேறு எந்தவிதத்திலோ ஏனைய பெண்களை நினைத்தும் பார்க்கக்கூடாது என்று மட்டும் வேதம் போதிக்காமல் (யாத்தி. 20:17) தனது முழுத் திருப்தியையும் தன் மனைவியிலேயே அடைய வேண்டும் என்றும் போதிக்கின்றது. மனைவியைப் பராமரிப்பதில் இதுவும் ஒரு அம்சமாகும். நீதிமொழிகள் பின்வறுமாறு கூறுகிறது.

> “உன்கிணற்றிலுள்ள தண்ணீரையும், உன் திரவில் ஊறுகிற ஜலத்தையும்பானம் பண்ணு. உன் ஊற்றுகள் வெளியிலும் உன் வாய்க்கால்கள் வீதிகளிலும் பாய்வதாக. அவைகள் அன்னியருக்கும் உரியவைகளாயிராமல், உனக்கே உரியவைகளாயிருப்பதாக. உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன் இள வயதில் அனைவியோடே மகிழ்ந்திரு. அவளே நேசிக்கப்படத்தக்க பெண் மானும், அழகான வரையாடும் போலிருப்பாளாக; அவளுடைய ஸ்தனங்களே எப்போழுதும் உன்னைத் திருப்தி செய்வதாக; அவளுடைய நேசத்தால் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக.” *(நீதி. 5:15-19)*

**இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும் அடுக்களை வேலை செய்வது அவமானம் என்று கருதும் வீட்டுத் தலைவர்கள் இருக்கிறார்கள்.**

மனைவியின் சரீரத்தேவைகளை நிறைவேற்றுவது மட்டுமல்லாது அவளது ஆன்மீகத்தேவைகளையும் நிறைவேற்றுபவனாக கிறிஸ்தவக் கணவன் இருக்க வேண்டும். மற்ற எல்லாத்தேவைகளையும் நிறைவேற்றி இதில் தவறிழைக்கிறவன் கிறிஸ்தவக் கணவனாக இருக்க முடியாது. தானும் கிறிஸ்தவ வாழ்வில் வளர்ந்து தனது மனைவிக்கும் அவ் வாழ்வில் வழிகாட்டியாகவும், ஆசானாகவும் இருக்க வேண்டியது கணவனின் கடமை. குடும்ப ஆராதனையை வீட்டில் தவறாது முன்னின்று நடத்தி வேத போதனைகளை அளித்து மனைவி வேத அறிவில் சிறக்க கணவன் வழிகாட்டுபவனாக இருக்க வேண்டும். தன் மனைவி மனத்திலும், ஆவியிலும் பலமுள்ளவளாக இருக்க கணவன் அவளுக்கு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் (1 பெதுரு 3:7). இன்று அநேக கிறிஸ்தவ மனைவிகள் போலிப்போதனைகளை சுலபமாக நாடி ஓடி தங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை சீரழித்துக் கொள்கிறார்கள். பல கணவர்கள் இதைப் பார்த்தும் பேசாதிருந்து விடுகிறார்கள். கணவன் ஒரு சபைக்கும், மனைவி ஒரு கூட்டத்திற்கும் என்று போவதும் வழக்கமாக இருக்கிறது. இது கிறிஸ்தவ குடும்பத்திற்கு ஏற்றதல்ல. இதற்குக் காரணம் குடும்பத் தலைவனான கணவன் தன் பொறுப்புணர்ந்து மனைவியை வழிநடத்தாததே. இன்று பெண்களின் பலவீனமறிந்து அவர்களை மயக்குவதற்கென்றே பல போலி ஊழியங்கள் நடந்து வருகின்றன. கிறிஸ்தவக் கணவன் தன் மனைவியை இத்தகைய ஆபத்திலிருந்து காப்பாற்ற அவளுக்கு நல்ல போதனைகளை வழங்க வேண்டும். போலிகளை அடையாளம் கண்டுகொள்ள உதவ வேண்டும். இதையெல்லாம் நிறைவேற்ற அவன் வேத அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குடும்பமாக ஒரே சபைக்குப்போய் ஆராதனையில் ஈடுபடுவதையும் வழக்கமாகக்கொள்ள வேண்டும். ஒரே சத்தியத்தில் வளர்ந்து வரவேண்டும். இதையெல்லாம் செய்யாத கணவன் எப்படிக் கிறிஸ்தவக் கணவனாக இருக்க முடியும்? கிறிஸ்தவக் கணவனே! கிறிஸ்து தந்திருக்கும் பொறுப்புகளை இனியாவது உணர்ந்து நிறைவேற்றுவாயா?

# குடும்ப ஆராதனை

குடும்ப ஆராதனை நடத்துவது எப்படி? குடும்ப ஆராதனை குடும்பங்களில் நடத்தப்பட வேண்டும். யார் யார் குடும்பத்தில் இருக்கிறார்களோ அவர்கள் அனைவரும் குடும்பத் தலைவனின் கீழ் இவ்வாராதனையில் கலந்து கொள்ள வேண்டும். இது சிறு குழந்தைகளையும், வீட்டில் வேலைக்கு இருப்பவர்களையும் உள்ளடக்கும். குடும்ப ஆராதனை சிறப்பாக நடக்க வேண்டுமானால் தொடர்ச்சியும், வசதிக்கேற்றவிதத்தில் அதை நடத்தும் அணுகுமுறையும் நிச்சயம் அவசியம். ஒரு நாள் நடத்திவிட்டு வாரமுழுதும் அதை அலட்சியம் செய்யக் கூடாது. தடையில்லாமல் அது தொடர்ந்து குடும்பங்கள் தோறும் நடக்க வேண்டும். அத்தோடு காலையில் வேலை இருந்ததால் குடும்ப ஆராதனை நடத்த முடியவில்லை என்று முழு நாளையும் வீணாக்கிக் கொள்ளக்கூடாது. காலையில் முடியவில்லை என்றால் மாலையிலாவது அதை எப்படியும் நடத்திவிட வேண்டும்.

எவ்வளவு நேரம் குடும்ப ஆராதனை நடத்த வேண்டும்? என்ற கேள்வி நிச்சயம் எழும். அது குடும்பத்தின் அமைப்பையும், குடும்ப அங்கத்தவர்களின் வசதியையும் பொறுத்து அமைய வேண்டும். சிறு குழந்தைகளால் அதிக நேரம் பொறுமையாக இருக்க முடியாது. அதேபோல் பாலருந்தும் பருவக் குழந்தைகளின் வசதியையும் பார்க்க வேண்டும். எனவே குறைந்தது இருபது நிமிடங்கள் அல்லது அரைமணி நேரம் அதற்காக செலவிடுவது இதுவரை குடும்ப ஆராதனை நடத்தாதவர்களுக்கு நல்ல ஆரம்பமாக அமையும்.

குடும்ப ஆராதனையை யார் நடத்துவது? வீட்டுத் தலைவனே பெரும்பாலும் அதை முன்னின்று நடத்த வேண்டும். அதில் கலந்து கொள்ளும் அனைவருமே அதில் பங்கு கொள்ளும்விதமாக அது நடத்தப்பட வேண்டும். வீட்டுப் பெண்களும் அதில் நிச்சயமாகப் பங்கு பெற வேண்டும். சபையில்தான் பெண்கள் பேசுவதற்கும், ஜெபிப்பதற்கும் வேதம் அனுமதி தரவில்லையே தவிர, குடும்ப ஆராதனையில் அவர்கள் பேசக் கூடாது என்று வேதம் போதிக்கவில்லை. ஆகவே, வீட்டுத் தலைவிகள் நிச்சயமாக வீட்டுத் தலைவனோடு இணைந்து இதில் பங்கு கொள்ள வேண்டும்.

குடும்ப ஆராதனையில் காணப்பட வேண்டிய மூன்று முக்கிய அம்சங்களை இப்போது பார்ப்போம்:

**சங்கீதம்** - சங்கீதம் பாடிக் குடும்ப ஆராதனையை நடத்த வேண்டும். கர்த்தரைப் பாடித் துதித்து ஆராதிப்பது ஆராதனையின் ஒரு பகுதி. சபையில் பாடும் கீர்த்தனைகளையும், சங்கீதங்களையும், பாடல்களையும், நமது குழந்தைகள் ஞாயிறு பாடசாலையில் பாடும் பாடல்களையும் பாடிக் கர்த்தரைத் துதிக்க வேண்டும். குடும்பத்தில் நடக்கும் இத்தகைய ஆராதனை சபை ஆராதனைக்கு நம்மைத் தயார் செய்யும். நமது வீட்டாரும் சபை வாழ்க்கையில் மேன்மை அடையவும் உதவும். குடும்ப ஆராதனை நடத்தாதவர்கள் சபை ஆராதனையின் இன்பம் காண முடியாது.

**வேதவாசிப்பு** - குடும்ப ஆராதனையில் வேத போதனை கொடுக்கப்பட வேண்டும். குடும்ப அங்கத்தவர்கள் கர்த்தருடைய வார்த்தையில் அன்பு கூர்ந்து, அவர் வார்த்தையின்படி வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற உயர்ந்த நொக்கத்தின் அடிப்படையில் வேதபோதனை அமைய வேண்டும் (மத்.4:4). பலவிதங்களில் இவ்வேத போதனையை நாம் குடும்பங்களில் நடத்தலாம். (1). ஒரு குறிப்பிட்ட முறையின் அடிப்படையில் வேதத்தைத் தொடர்ந்து வாசித்தல். (2). வினா விடை முறையில் அமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகளை எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் போதித்தல். (3) வேத வசனங்களை மனனம் செய்ய வைத்து அவற்றிற்கான விளக்கத்தைக் கொடுத்தல். (4) ஜோண் பனியனின் மோட்ச பயணம் போன்ற நல்ல நூல்களை வாசித்தல். ஸ்பர்ஜனின் பிரசங்கங்கள் இன்று தமிழில் இருக்கின்றன. அவற்றையும் வாசிக்கலாம் (வேத வாசிப்பும் நிச்சயம் இருக்க வேண்டும்). இந்நூல்களையும் நாம் வேதத்தைப் பயன்படுத்தி ஆராய்ந்து விளங்கிக்கொள்ள வேண்டும். திருமறைத்தீபத்தில் தொடர்ந்து வெளிவரும் கிறிஸ்தவக் கோட்பாட்டு விளக்கங்களையும் பயன்படுத்தலாம். இதனால் முழுக்குடும்பமுமே வேத அறிவைப் பெற்றுக் கொள்ளும். குடும்பத் தலைவர்கள் இவற்றைப் போதிக்கும் போதும், நூல்களை வாசிக்கும்போதும் ஆராதனையில் கலந்து கொள்ளும் சிறு குழந்தைகளின் ஆர்வம் குன்றிவிடாதபடி பாடங்களை நடத்த வேண்டும். இடையில் நிறுத்திக் கேள்விகள் கேட்பதும், நல்ல உதாரணங்களைத் தந்து போதிப்பதும் குழந்தைகள் ஆர்வத்துடன் கலந்து கொள்ள உதவும்.

**ஜெபம்** - முழுக்குடும்பமும் ஜெபத்தில் ஈடுபட வேண்டும். ஜெபத்தில் சரியான வார்த்தைகளைப் பயன்படுத்தி ஜெபிக்க வேண்டும். குழந்தைகளும் ஜெபத்தில் கலந்து கொள்ள இடமளிக்க வேண்டும். குடும்பத் தலைவர்கள் ஜெபக்குறிப்புகளை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். வீட்டாருக்காகவும், உறவினருக்காகவும், நமது சபையாருக்காகவும், நம்மோடு தொடர்புடைய சபைகளின் தேவைகளுக்காகவும், நாட்டிற்காகவும், உலகத்திற்காகவும், அனைவருடைய ஆன்மீகத் தேவைகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும். ஜெபங்கள் நீண்டதாக அமைந்து குழந்தைகள் அக்கறை இழந்து விடும்படியாக இருக்கக்கூடாது. எவ்வளவு நேரம் ஜெபிக்க வேண்டுமென்பது ஒவ்வொரு குடுமபத்தையும் பொறுத்தது. தேவைக்கேற்பவும், குடும்ப அங்கத்தவர்களுக்கேற்றவிதத்திலும் இதை ஒவ்வொரு குடும்பமும் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவக் குடும்பமும், திருச்சபை வாழ்வும் சீரடைய குடும்ப ஆராதனை எத்தனை அவசியம் என்பதில் நமக்கு இனியும் தெளிவில்லாமல் இருக்க முடியாது. குடும்ப ஆராதனை நடத்துவது குடும்பத்தில் இறையியல் கல்லூரிபோல் அமைந்து முழுக்குடும்பத்தையும் வேத அறிவில் வளர்க்கும் என்று யாரோ சொல்லியிருப்பது முழு உண்மை. நம்முன்னோர் கிறிஸ்துவின் அன்பிலும், வேத ஞானத்திலும் சிறந்திருக்கப் பேருதவி புரிந்துள்ள குடும்ப ஆராதனை நம் குடும்பங்களில் ஒளியேற்றட்டும்.

# வேண்டும் இன்று விழிப்புணர்வு!

இப்பத்திரிகையின் பெருநோக்கங்களில் ஒன்று திருச்சபைப் போதகர்கள் தேவமனிதர்களாக இருந்து தங்கள் ஊழியத்தைக் கொண்டு நடத்த முடிந்ததைச் செய்வது. திருச்சபையும் ஊழியமும் சம்பந்தமான பல ஆக்கங்கள் ஏற்கனவே இப்பத்திரிகையில் வந்துள்ளதை வாசகர்கள் அறிவர். இயேசு கிறிஸ்து தன்னுடைய திருச்சபை மூலமாகவே இவ்வுலகில் தனது பெரு நோக்கங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார் என்ற வேதபோதனையில் பெருநம்பிக்கை வைத்திருக்கும் இப்பத்திரிகை, கிறிஸ்துவால் அழைக்கப்பட்டு சபைகளால் அங்கீகரிக்கப்பட்டு போதக ஊழியத்தை நடத்திவரும் போதகர்களின் வாழ்க்கை, ஊழியம் பற்றி அதிகம் அக்கறை கொண்டு எழுதுவதில் ஆச்சரியமில்லை.

போதக ஊழியம் பற்றி சீர்திருத்தவாதிகள் அநேக ஆக்கங்களை வெளியிட்டுள்ளார்கள். அவர்களைப்போல் சபை வரலாற்றில் இதுபற்றி ஆழமாகவும், ஆக்கபூர்வமாகவும் எழுதியவர்கள் மிகக்குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். போதகவியல் (Pastoral Theology) என்று எடுத்துக் கொண்டால் அதைப்பற்றி எழுதியுள்ள தொமஸ் மர்பி, டபிள்யூ. ஜி. டி. செட், பெட்ரிக் பெயர்பேன், ரிச்சட் பெக்ஸ்டர், சார்ள்ஸ் பிரிஜ்ஜட்ஸ், ஆர். எல். டெப்னி, அலெக்சான்டர் போன்ற பல சீர்திருத்தவாத போதகர்களின் பெயர்கள் என் நினைவலைகளில் தவழ்கின்றன. இவர்களைத் தவிர ஸ்பர்ஜனும், அவருக்குப்பின் இந்நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த மார்டின் லாயிட் ஜோன்சும் என் நினைவுக்கு வருகின்றார்கள்.

வரலாற்றில் சீர்திருத்தவாதம் போதக ஊழியத்திற்கு பெருநன்மை புரிந்ததில் முன்னிற்பதற்குக் காரணம் என்ன? அதற்கான பல காரணங்கள் இருந்தபோதும் முக்கியமான இரு காரணங்களைக் குறிப்பிட வேண்டும் (1) சீர்திருத்தவாதம் வேதம் போதிக்கும் திருச்சபை ஊழியத்தில் தீவிர நம்பிக்கை வைத்துள்ளது. (2) போதக ஊழியம் சிறப்பாக அமைந்தாலொழிய சபையும், சபைமக்களும் ஒரு போதும் வளரமுடியாதென்பதில் சீர்திருத்தவாதம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளது.

இக்காரணங்களே சீர்திருத்தவாத போதகர்களை திருச்சபையோடு தொடர்புடைய போதக ஊழியம் குறித்து அதிகம் பேசவும் எழுதவும் வைத்தது. பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் ஊழியங்களிலும், சபையோடு உறவில்லாத சுயாதீன நிறுவன ஊழியங்களிலும் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் அவர்களுக்கு சபைபற்றிய வேதபூர்வமான ஞானமில்லாததும், போதக ஊழியத்தை அவர்கள் துஷ்பிரயோகம் செய்து தங்களுடைய சுயநலனுக்காகப் பயன்படுத்திக் கொள்வதுமே. இன்று போதக ஊழியம் உயிர்பெற்று சபை மக்களுக்குப் பயன்படும் விதத்தில் அமைய வேண்டிய ஒரு சூழ்நிலை தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுவதை யாரும் மறுக்க முடியாது. இத்தகைய சீர்திருத்தம் ஏற்படவேண்டுமெனில் அதற்கு முன்னோடியாக சில காரியங்கள் நிகழ்ந்தேயாக வேண்டும்.

## கிறிஸ்தவர்கள் மத்தியில் இன்று விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்

முதலில் கிறிஸ்தவர்கள் மத்தியில் விழிப்புணர்வு தோன்ற வேண்டும். வேதத்தின் அடிப்படையில் அமைந்த போதனைகளை மட்டுமே காது கொடுத்து கேட்பேன். அவை மட்டுமே என் ஆன்மீக வாழ்க்கை வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டு நான் வளர உதவும் என்ற வைராக்கியம் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட வேண்டும். கண்ணற்ற குருடர்கள் போலவும், காதற்ற செவிடர்கள் போலவும் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வரும் நிலை மாற வேண்டும். உணர்ச்சிக்குத் தூபமிட்டு, போலியான வாக்குறுதிகளைத் தரும் பிரசங்கிகளின் பக்கமே தலைவைப்பதில்லை என்ற மனஉறுதி ஏற்பட வேண்டும். சரீர சுகத்தையும், வாழ்க்கை வசதிகளையும் பெற்றுக்கொள்ள மட்டுமே கிறிஸ்தவ சுவிஷேசம் என்ற போக்கில் செயல்பட்டுவரும் கூட்டத்தாரின் கையிலகப்பட்டு ஆவிக்குத் தீங்கு தேடிக்கொள்ள மாட்டோம் என்று தீர்மானம் எடுக்க வேண்டும். வேதம் புரியவில்லை என்று சாக்குப் போக்குச் சொல்லி, ஆட்டு மந்தை போல் எதையும் சத்தியம் என்று நம்பி போலிகளின் பின்னால் திரியும் வழக்கத்தைக் கிறிஸ்தவர்கள் கைவிட வேண்டும். கிறிஸ்தவப் பத்திரிகைகள் என்ற பெயரில் திரியும் போலிப் பத்திரிகைகளைத் திரும்பியும் பார்க்கக்கூடாது. பணம், பணம் என்று பிணமாக அலையும் ஊழியங்களின் பக்கம் காலெடுத்தும் வைக்கக்கூடாது. தீர ஆராய்ந்து படித்துப் போதிக்கும் போதகர்களைக் கொண்டமைந்து, வேதபூர்வமான போதனைகளை அளிக்கும் சபைகளுக்கு மட்டும் தம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். சீர்திருத்தவாதம் ஏற்பட்ட பதினாறாம் நூற்றாண்டு மக்கள் சத்தியத்திற்காகத் தம் உயிரையும் பணயம் வைக்கத் தீர்மானித்தனர். வேதத்தைப் படிக்கக் கூடாது என்ற கட்டளை இருந்தபோதும் அதற்குக் கட்டுப்பட மறுத்து வேதத்தைப் படித்து அதில் இன்பம் கண்டனர். போலிகளை அடையாளம் கண்டு கொள்ளும் பக்குவத்தையும் பெற்றனர். இதனை வேதமே அவர்களுக்குத் தந்தது. இந்நிலை முதலில் நம்மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும். கிறிஸ்தவர்கள் தொடர்ந்தும் சபைகளையும், சமயக் குழுக்களையும், பிரசங்கிகளையும் திட்டிக் கொண்டிருப்பதால் பயனில்லை. இது செயல்பட வேண்டிய நேரம். சிந்திக்க மறுப்பவர்களுக்கும், ஆடல்கள், பாடல்கள் என்றழைந்து உணர்வலைகளுக்குத் தீனி தேடித் திரிபவர்களுக்கும், சுகமளிக்கும் அற்புதங்களே வாழ்க்கை என்றிருப்பவர்களுக்கும் சீர்திருத்தம் தேவை

யில்லை. கிறிஸ்தவர்களின் சிந்தனைப் போக்கில் பெரு மாறுதல் ஏற்பட்டு அவர்கள் சத்தியத்தை மட்டும் தேடி அலைவார்களானால் சீர்திருத்தம் எழப்போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

## போதக ஊழியத்தைப்பற்றி திருச்சபைகள் வேத பூர்வமான சிந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும்

(1) போதக ஊழியம் சிறப்பாக அமைய இன்று ஆவிக் குரிய வாழ்க்கையில் முதிர்ச்சியுள்ள, பண ஆசையில் லாத, தகுதிக்கு ஏற்றவிதத்தில் வாழத்தெரிந்த போதகர் கள் தேவை. அத்தகையவர்களை மட்டுமே போதக ஊழியத்திற்கு தெரிவு செய்ய வேண்டும். தெரிவு செய் யப்பட்டவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்ப தில் சபை எப்போதும் முன்னிற்க வேண்டும். சபை மக்களின் தரத்தைமீறி வாழ முயற்சிக்கும் மனிதர்களை சபை நிராகரிக்க வேண்டும். முழு நேர ஊழியவசதி இல்லாத சபையின் போதகர்கள் பகுதிநேர வேலை செய்வது பாவம் அல்ல. அதுவே வேதபூர்வமானதும், நியாயமானதும்கூட. ஊரெல்லாம் ஊழியத்திற்காகப் பிச்சை எடுப்பதைவிட இது மேலானது.

(2) புதுக்கிறிஸ்தவர்களையும், அனுபவ முதிர்ச்சி இல் லாதவர்களையும், வேதஞானமில்லாதவர்களையும் போதக ஊழியத்திற்குத் தெரிவு செய்யக்கூடாது. இதை விடப்பெரிய ஆபத்து சபைகளுக்கு ஏற்பட முடியாது. போதகர்கள் இல்லையே என்ற ஆதங்கத்தாலும், புது ஊழியங்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற அவசரத் தாலும் பலசபைகள் இத்தவறைச் செய்து விடுகின்றன. தகுதி இல்லாதவர்களைக்கொண்டு சபை ஆரம்பிப்பது தகாது.

(3) படித்த (அனுபவமுள்ள, முதிர்ந்த) கிறிஸ்தவ இளை ஞர்களைப் போதக ஊழியத்தைக் குறித்து சிந்திக்கு மாறு சபைகள் வழிநடத்த வேண்டும். பல்கலைக்கழகப் படிப்பை முடித்த கிறிஸ்தவர்களை இன்று போதகர்க ளாகப் பார்ப்பது அரிதாக இருக்கிறது. மருத்துவம், கணிப்பொறி என்று போய்க் கட்டுக்கட்டாய்க் காசு சேர்ப்பதே பல இளைஞர்களின் போக்காய் விடுகிறது. படித்த, திறமைசாலிகளான, நல்ல கிறிஸ்தவ இளைஞர் கள் ஏன் இன்று கிறிஸ்தவ ஊழியத்தை எண்ணிப் பார் க்கக்கூடாது? பட்டங்கள் பெற்ற லூதரையும், ஜோண் கல்வினையும், ஜோண் ஓவனையும் நமது கிறிஸ்தவ இளைஞர்களுக்கு நினைவுறுத்தி போதக ஊழியத்தைக் குறித்து சிந்திக்கும்படிச் செய்ய வேண்டும். இங்கிலாந்து அரசியின் வைத்தியராக இருக்கக்கூடிய அருமையான சந்தர்ப்பத்தை உதறித் தள்ளிவிட்டு உலகாளும் நம்மர சராகிய இயேசுவுக்கு ஊழியம் செய்ய வந்த நம்காலத்து மார்டின் லொயிட் ஜோண்சை எண்ணிப் பார்க்க வேண்டும். அம்மனிதரின் படிப்பும், சிந்தனை வளர்ச்சி யும் சீர்திருத்தக் கிறிஸ்தவத்தை உரமிட்டு வளர்த்தது.

(4) இறையியல் கல்லூரிக்குப்போனால்தான் போதக னாக முடியும் என்ற மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். இறையியல் கல்லூரி ஒருவனைப் போதக னாக்கும் என்று வேதம் போதிக்கவில்லை. போதகர் களை சபையில்தான் அடையாளம் கண்டு கொள்ள முடியும். சபை அங்கீகரித்தவர்களுக்கு வேதபூர்வமான இறையியல் கல்லூரிகள் துணை செய்யலாம். இறை யியல் கல்லூரிக்கு அவசியம் போகத்தான் வேண்டும் என்பது வேதத்தில் இல்லை. இன்று பல சபைகள் போதக ஊழியத்திற்கு வர வேண்டியவர்களை சபையில் தேடிப்பார்க்காமல், சபைக்கு வெளியில் யார் யார் இறையியல் கல்லூரிக்குப் போய்வந்திருக்கிறார்கள் என்று தேடிக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் ஒருவர் இறையியல் கல்லூரியில் வேதத்தைத்தான் படித்து விட்டு வந்திருக்கிறாரா என்றுகூட ஆராய்வதில்லை. இதைப்பற்றிக் கேட்டால் இதுதான் "டிரெடிசன்", இதை மாற்ற முடியாது என்பார்கள். இத்தகைய எண் ணங்கள் இருக்கும்வரை சீர்திருத்தம் சுட்டுப் போட் டாலும் வராது.

## பக்தியும், பண்புமுள்ள போதகர்கள் இன்று சபை களுக்குத் தேவை

"உன்னைக்குறித்தும், உபதேசத்தைக்குறித்தும் எச் சரிக்கையாயிரு" என்று பவுல் தீமோத்தேயுவுக்கு கூறினார் (1 தீமோ. 4:16). உபதேசத்தைக்குறித்து பின்பு பார்ப்போம். இப்போது "உன்னைக்குறித்து" என்ற வார்த்தையைக் கவனிப்போம். உன்னைக்குறித்து என்று பவுல் கூறுவது போதகனின் சொந்த பக்தி யையே குறிக்கிறது. போதக ஊழியத்திற்கு வருபவர்கள் Proffessionals ஐப்போல் நடந்து கொள்ளக்கூடாது. இன்று அநேக போதகர்கள் இவ்விதமாகவே நடந்து கொள்கிறார்கள். அவர்களுடைய பக்தி, சினிமா நடிகன் கவர்ச்சிக்காகப் போட்டுக் கொள்ளும் அலங் காரத்தைப் போலவே இருக்கின்றது. அவர்களுடைய பேச்சு உள்ளத்திலிருந்து வருவதாயில்லை. பெனி ஹின் பேசுவதை டெலிவிசனில் பார்த்திருப்பவர்களுக்கு நான் கூறுவது புரியும். பேச்சிலே சுவை இருந்தாலும் அதில் சத்தில்லை. சொல்லில் அலங்காரம் இருந் தாலும் அதில் சுத்தமிருக்காது, அறிவிருக்காது, உண் மையுமிருக்காது. இத்தகைய மனிதர்கள் போதக ஊழி யத்தை ஒரு தொழிலாக மட்டுமே கருதுகிறார்கள். இது போதக ஊழியத்தையும், திருச்சபையையும் இன்று பிடித்திருக்கும் ஒரு சாபக்கேடு.

தான் மிகுந்த மனத்தாழ்மையுடன் கர்த்தருக்கு சேவை செய்ததாக பவுல் எபேசிய மூப்பர்களைப் பார்த்துக் கூறினார். (அப்போஸ். 20:18-35). இந்த மனத்தாழ்மை இன்று போதக ஊழியத்திலிருக்கும் அநேகருக்கு இல் லாமலிருப்பது வேதனை தருகிறது. போதிப்பவனுக்கு இருக்கும் அதிகாரமும், பதவி மேன்மையும், பாராட்டு தல்களும் சுலபமாகவே அவன் தலையில் ஏறிவிடும் என்ற ஆபத்தின் காரணமாகத்தான் வேதம் புதிய கிறிஸ்தவர்களும், முதிர்ச்சி இல்லாதவர்களும் அவ்வூழி யத்திற்குத் தகுதி இல்லாதவர்கள் என்று வற்புறுத்து கிறது (1 தீமோ. 3). தீமோத்தேயு இளைஞனாக இருந் தாலும் அவனுக்கு மனத்தாழ்மை இருந்தது. ஆனால், வயது போயிருந்தும், போதக ஊழியத்தில் பல ஆண்டு கள் இருந்தும் மனத்தாழ்மை இல்லாமல் நடந்து, சபை மக்களை உதாசீனப்படுத்தி போதக ஊழியத்திற்கும், கிறிஸ்துவிற்கும் இழுக்குத் தேடித்தந்து கொண்டிருக்கி றார்கள் அநேகர் இன்று. வேதம் போதிக்கும் மனத் தாழ்மை இன்று போதகர்களுக்கு அவசியம்.

போதகன் தன் சொந்த வாழ்க்கையைக் குறித்து எப் போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அன்றா டம் திருந்துகிறவனாக இருக்க வேண்டும். "குணப் படாத பிரசங்கி" என்ற வார்த்தைகள் ஒன்றுக்கொன்று முரணானவை என்று ஸ்பர்ஜன் கூறுகிறார். ஏனெ னில், போதகன் குணமடைவதிலேயே (திருந்துவதி லேயே) எப்போதும் குறியாயிருப்பான். திருந்தாத போதகனால் மக்களுக்கு ஆபத்து. அவர்களுடைய ஆன்மீக வாழ்க்கைக்கு அவனால் எந்த நன்மையு

மில்லை. அத்தகையோரைப்பற்றி ஸ்பர்ஜன், "அவன் உதவாத வேலையாள்; தான் நடந்திராத பாதையில் பிரயாணிகளை நடத்தும் வழிகாட்டி; திசை தெரியாத மாலுமி; மூடனாயிருந்தும் பாடம் போதிப்பவன்; மழையில்லாத மேகம்; இலையிருந்தும், கனியற்ற பாழ் மரம்" என்று வர்ணித்திருக்கிறார்.

போதகனுக்கு மெய்யான பக்தி மட்டுமல்ல அவனுக்கு பலமான பக்தியும் தேவை என்று ஸ்பர்ஜன் கூறினார். "தேவபக்தியாகிய அவனுடைய ஜீவ நாடி ஒழுங்காக அடித்தல் வேண்டும். அவனது விசுவாசக்கண் தெளிவாக இருத்தல் வேண்டும். தீர்மானம் என்ற அவன் பாதம் உறுதியாய் நிற்றல் வேண்டும். அவனது முழு உள்ளமும் தூய அறிவுடையதாயிருக்க வேண்டும்." என்று ஸ்பர்ஜன் தொடர்ந்து கூறுகிறார். அநேகர் திருச்சபையில் சாதாரண அங்கத்தவர்களாக இருக்கத் தகுதியுள்ளவர்களாயிருந்தபோதும் திருச்சபை அதிகாரிகளாக இருக்கத் தகுதியுள்ளவர்களல்ல. அவர்களுடைய வாழ்க்கை அதற்குப் பொருந்திவராது. இதனாலேயே போதகன் மிகவும் குணசீலனாக இருக்க வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கிறது.

நேரம் தவறாமை, சொன்ன சொல்லைக் காப்பாற்றல், உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசாமல் உண்மையே பேசுதல், ஒளிவு மறைவின்றி நடத்தல் (transparent) ஆகிய குணங்கள் போதகனுக்கிருக்க வேண்டிய அவசியமான அடையாளங்கள். இவையெல்லாம் இல்லாமல் ஒருவன் போதக ஊழியத்தை நினைத்தும் பார்க்கக்கூடாது. மெய்யான போதகனிடம் துணிகரமான பாவத்திற்கு இடமிருக்காது. "துணிகரமான பாவம் ஒருவனில் காணப்பட்டால் பின்னால் அவன் எவ்வளவு தூரம் அதற்காக மன வருத்தப்பட்டாலும் போதகராக இருக்க வேண்டிய குணங்கள் அவனிடம் ஆரம்பத்திலிருந்தே இல்லை என்பது வெளிப்படை" என்று ஸ்பர்ஜன் கூறியிருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். இன்று துணிகரமாக பெண்களுடன் உறவாடிவிட்டு கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டேன் என்று மறுபடியும் பிரசங்கிக்கப்போகும் மனிதர்கள் மெய்ப்போதகர்கள் அல்ல. இதைக்கண்டித்து அத்தகையோரைப் பிரசங்க மேடை பக்கம் வரவிடாமல் செய்யும் நாத்தானுக்கிருந்த தைரியமோ (2 சாமு.12) மனோபாவமோ இன்று திருச்சபைகளிடமும் இல்லை. ஒழுக்கத்திற்கு இடம் கொடுக்காத கிறிஸ்தவம் கிறிஸ்தவமாக இருக்க முடியாது. நமது கலாச்சாரமும், பண்பாடும் அப்படி - கொஞ்சம் பொறுத்துத்தான் போகவேண்டும் - என்ற பேச்சுக்கும், சிந்தனைக்கும் திருமறைபூர்வமான சீர்திருத்தக் கிறிஸ்தவத்தில் இடமில்லை. கர்த்தர் நமது கலாச்சாரத்திற்கேற்ப வேதத்தை மாற்றச்சொல்லவில்லை. வேதத்திற்கேற்ப கலாச்சாரம் மாறி அமைய வேண்டும்.

போதகர்களின் வாழ்க்கைக்கு இன்று பெரும் எதிரி பணமே. பணம், பணமென்று பதறி வீண்போய்க் கொண்டிருக்கும் அநேக ஊழியர்களை தமிழ்க் கிறிஸ்தவ உலகம் இன்று சகிக்க வேண்டிய நிலையிலிருக்கின்றது. கிறிஸ்தவ பத்திரிகைகளைத் திறந்தாலோ, ஜெப இதழ்களைத் திறந்தாலோ, பிரசங்கத்தைக் கேட்டாலோ, தனிப்பட்டவிதத்தில் அனுப்பப்படும் கடிதங்களைப் பார்த்தாலோ அங்கே பணத்தேவையைப் பற்றித்தான் பார்க்க முடிகின்றது. இந்நிலை மாற வேண்டும். கர்த்தரை நம்பி, கைகளைப்பயன்படுத்தி உழைத்துச் சேர்த்த பணத்தில் சபை நடத்திய கேரி போன்ற மிஷனரிகள் இன்று எங்கே! கொல்லிமலையில் கொல்லும் மலேரியாக் கொசுக்களுக்குத்தன் உயிரைத்தந்து ஊழியம் செய்த பிராண்ட் போன்ற மனிதர்கள் இன்று ஏன் குறைவு? திருச்சபை ஊழியம் பணமில்லாமல் நடப்பது கஷ்டம்தான். ஆனால், பணத்தைப் பற்றிப் பேசுமளவுக்கு வேதபூர்வமான சீர்திருத்தத்தைப்பற்றி அநேகர் சிந்திக்க மறுப்பது ஏன்? சிந்தித்துப்பாருங்கள்!

## போதக ஊழியத்தில் அக்கறையுள்ளவர்கள் இன்று சபைகளுக்குத் தேவை

பவுல் எபேசியாவின் மூப்பர்களைப்பார்த்து உங்களைக் குறித்தும், ஊழியத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் என்று அறிவுரை செய்தார். உங்களுக்குள்ளேயே ஓநாய்கள் தோன்றிவிடலாம் என்றும் எச்சரிக்கை செய்தார் (அப்.20) பவுல் திமோத்தேயுவைப் பார்த்து, உன் உபதேசத்தைக் குறித்து எச்சரிக்கையாயிரு என்று கூறியுள்ளார். வேதத்தைப் படிப்பதிலும், அதைப் போதிப்பதிலும் போதகர்கள் அதிக நாட்டம் கொள்ள வேண்டும். சுயகட்டுப்பாடுடையவர்களே கஷ்டப்பட்டுப் படிப்பார்கள். சபையார் வளர வேண்டுமானால் படிக்க வேண்டும், படித்தால்தான் போதிக்க முடியும் என்ற வாஞ்சையை மனத்தாழ்மை மட்டுமே ஒருவரில் ஏற்படுத்த முடியும். எத்தனையோ வேலை இருக்கும்போது படிப்பதாவது, என்ற எண்ணம் இறுமாப்பிற்கு அடையாளம். நமது பாவங்களில் மோசமானது இறுமாப்பு என்று ரிச்சட் பெக்ஸ்டர் கூறியுள்ளார். பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அமெரிக்க சீர்திருத்தப் போதகரான ஜொனத்தன் எட்வர்ட்ஸ் ஒவ்வொரு நாளும் பதின்மூன்று மணித்தியாளங்களை செலவிட்டு வேதத்தைப் படித்தார். கஷ்டப்பட்டு படித்துப் போதிப்பது அவசிய மில்லை என்று எண்ணுபவர்கள் ஸ்பர்ஜனின் அறிவுரைகளை வாசிக்க வேண்டும் (ஸ்பர்ஜன் அறிவுரைகள், சுவிஷேச ஊழிய நூல் நிலையம், சென்னை, பக்கங்கள் 64-133) முழுநேர ஊழியம் என்று வந்துவிட்டு போதனைகளைத் தயார் செய்வதில் நேரத்தைச் செலவிடாமல் ஊரைச் சுற்றுபவர்களால் சபைக்கு நன்மை இல்லை. உடலை வருத்திப் பாடுபட்டு பிரசங்கத்தைத் தயாரிக்காமல் இனிப் பிரசங்க மேடைக்கே போவதில்லை என்று கர்த்தருக்கு முன் நாம் வாக்குறுதி எடுக்க வேண்டும். எத்தனை பேரை இயேசுவுக்குள் கொண்டு வந்திருக்கிறோம், எத்தனை ஊரில் ஊழியங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம் என்று பட்டியல் போட்டுக் காட்டும் பத்தாம் பசலிக் கூட்டத்தோடு சேர்ந்து விடாமல் கர்த்தர் கொடுத்திருக்கும் ஆத்துமாக்களின் வளர்ச்சிக்கு வேதஉரமிட்டு வளர்க்கும் மேலான ஊழியத்தில் ஈடுபடவேண்டும். சீர்திருத்தவாதகாலப் போதகர்கள் தம்மக்களுக்கு வினா விடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகளைப் போதித்து, அவர்களை வளர்த்தெடுத்தனர். இன்று அக்கோடுபாடுகள் பற்றி எந்தவித அறிவோ, அவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் சிரத்தையோ இல்லாமல் பிரசங்கம் என்ற பெயரில் எதை எதையோ பேசிப் போதகர்கள் காலத்தைக் கழிப்பது எத்தனை பெரிய அக்கிரமம். வேதபோதனைகளைத் தயார் செய்வதற்கு நேரத்தைக் கொடுக்க மறுப்பது மருத்துவன் நோயாளிக்குக் கொடுக்க வேண்டிய மருந்தில் அக்கறை காட்டாமல் இருப்பதற்கு ஒப்பானதாகும்.

மேற்குறிப்பிட்டவற்றில் தமிழ்க் கிறிஸ்தவ உலகில் இன்று விழிப்புணர்வு தோன்றுமானால் நிச்சயம் நாம் சீர்திருத்தப்பாதையில் அடியெடுத்து வைத்திருக்கிறோம் என்று தான் அர்த்தம். அக்காலமும் விடியுமா?

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

**கேள்வி 41**: *நியாயத்தீர்ப்பு நாளின்போது அவிசுவாசிகளுக்கு என்ன நடக்கப்போகின்றது?*

**பதில்**: *நியாயத்தீர்ப்பு நாளின்போது அவிசுவாசிகள் அவமதிப்புக்குள்ளாகும்படியாக எழுப்பப்பட்டு, பிசாசுடனும், அவனது தூதர்களுடனும் சேர்ந்து, வார்த்தையால் விவரிக்க முடியாத கொடூரத்தை நரகத்தில் தங்களுடைய சரீரத்திலும், ஆவியிலும் நித்தியத்துக்கும் அனுபவிக்கும்படியாகத் தண்டிக்கப்படுவார்கள்.*

*யோவான் 5:28-29; தானியேல் 12:2; 2 தெசலோ. 1:8-9; மத்தேயு 13:49-50; வெளி. 14:10-11; மத்தேயு 25: 41, 46.*

**விளக்கக்குறிப்பு:** ஏற்கனவே 39 ஆம் வினா விடையில் (மலர் 5 இதழ் 3), இறந்தபின் அவிசுவாசிகளின் நிலை என்ன? என்பதை விளக்கியுள்ளோம். அவ்வினா விடை முக்கியமாக அவிசுவாசிகள் இறந்தபின் அவர்களுக்கு உடனடியாக என்ன நேர்கிறது என்பதை விளக்குகிறது. அதுபற்றி வேதத்திற்கு விரோதமான பல போதனைகள் இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் உலவுகின்றன. இறந்தபின் அவிசுவாசிகள் ஒன்றுமில்லாதபடி காற்றில் கலந்து விடுவார்கள் என்ற போதனையை மறுதலித்து, அவிசுவாசிகள் இறந்தபின் உடனடியாக நரகத்தை அடைந்து தங்களுடைய பாவத்தின் பலனாக நரக வேதனையை அனுபவிக்கத் தொடங்குவார்கள் என்று விளக்கியுள்ளோம். அதுமட்டுமல்லாமல் நியாயத் தீர்ப்பு நாள் வரையிலும் அவர்களுடைய சரீரங்கள் கல்லறையில் பாதுகாக்கப்படுகின்றன என்பதையும் அவ்வினா விடை விளக்குகிறது.

இக்கேள்வி நியாயத்தீர்ப்பு நாளில் அவர்களுக்கு என்ன நிகழப்போகிறது என்பதை விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நியாயத்தீர்ப்பு நாளில் விசுவாசிகளும், அவிசுவாசிகளும் உயிர்த்தெழுவார்கள் என்று வேதம் போதிக்கின்றது. வேதம் விசுவாசிகளின் உயிர்த்தெழுதலைப்பற்றியும், அவர்கள் அடையப்போகிற வாழ்வைப் பற்றியும் அதிகம் பேசுகிறபோதும் அவிசுவாசிகளும் அவ்வாறே உயிர்த்தெழுவார்கள் என்பதையும் போதிக்கத் தவறவில்லை. அவிசுவாசிகள் இறந்தபின் இடைத்தர நிலையில் உடனடியாக நரகத்தில் நரக வேதனையை அனுபவிக்கத் தொடங்கியபோதும், நியாயத்தீர்ப்பு நாளில் அதிகாரபூர்வமாக கிறிஸ்துவினால் நியாயந்தீர்க்கப்பட்டு தண்டனையை நித்தியத்திற்கும், சதா காலமும் அனுபவிப்பார்கள். யோவான் 5:28-29, அவிசுவாசிகளின் இந்நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு வாழ்வளிப்பதற்காக அல்ல, தண்டிப்பதற்காகவே என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்நியாயத்தீர்ப்பு அவிசுவாசிகள் தேவகோபத்தையும், இரண்டாம் மரணத்தையும் அனுபவிக்கும்படிச் செய்யும். ஆகவே, அவிசுவாசிகள் எழுப்பப்படும்போது அவர்கள் நித்திய மரணத்தை அடைவதற்காகவே எழுப்பப்படுகிறார்கள்.

அத்தோடு, உயிர்த்தெழும் அவிசுவாசிகள் நித்திய நிந்தையையும், இகழ்ச்சியையும் எதிர்நோக்குவதற்காக உயிர்த்தெழுவார்கள் என்று தானியேலில் (12:2) வாசிக்கிறோம். நியாயத்தீர்ப்பு நாளில் அவிசுவாசிகளின் பாவங்கள் அனைத்தும் எல்லோருக்கும் முன்பாக அவர்கள் இகழப்படும்படியும், நிந்திக்கப்படும்படியும் கிறிஸ்துவால் வெளிக்கொணரப்படும். அந்நாளில் பாவம் எத்தனை மோசமானது, கேவலமானது, அவலட்சனமானது என்பதை அவிசுவாசிகளின் நியாயத்தீர்ப்பும், தண்டனையும் எல்லோருக்கும் அறியத்தரும். நியாயத் தீர்ப்பு நாளில் பொய்யை முற்றாக ஒழித்து சத்தியத்தை நிலை நிறுத்துவது கிறிஸ்துவின் மேலான நோக்கமல்லவா? எந்தவித உயர்ந்த சிறப்புக்கும், மகிமைக்குமாக விசுவாசிகள் எழுப்பப்படுவார்களோ அவற்றிற்கெல்லாம் எதிரான அவமதிப்புக்கும், நிந்தைக்குமாக அவிசுவாசிகள் எழுப்பப்பட்டு நியாயந்தீர்க்கப்படுவார்கள்.


இதனால் தேவனை அறியாதவர்கள் கடவுளிடம் இருந்து தப்புவதற்கு மரணம் ஒரு பாதை என்று எண்ணி மகிழக்கூடாது. மரணத்தின் பின்வரும் நியாயத் தீர்ப்பு நாளில் உயிர்த்தெழுந்து சகல நிந்தையையும், தேவ கோபத்தையும் ஒவ்வொரு அவிசுவாசியும் சந்திக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். இந்நியாயத்தீர்ப்பு நாளைச் சந்திப்பதில் இருந்து ஒருவரும் தப்ப முடியாது. இதற்குப் பிறகு ஒருவரும் திரும்பிப் பார்க்கவும் முடியாது. இதற்குப்பிறகு மனந்திரும்புதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. பாவத்தின் காரணமாக தேவ கோபத்தை சுமந்து கொண்டிருக்கும் அவிசுவாசிகள் மரணத்திற்கு முன்பாக கர்த்தராகிய இயேசுவை விசுவாசிப்பதால் மட்டுமே இந்நியாயத்தீர்ப்பு நாளின் தண்டனையில் இருந்து தப்பி நித்திய வாழ்வை அடைய முடியும். நியாயத்தீர்ப்பு பற்றிய வேத போதனை கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் முக்கியத்துவத்தையும், அது எத்தனை ஊக்கத்தோடு இன்று பிரசங்கிக்கப்பட வேண்டும் என்ற அவசரத்தையும் உணரத்துகிறது.

பிசாசும், அவனுடைய தூதர்களும் நியாயத்தீர்ப்பு நாளில் அவிசுவாசிகளுடன் சேர்ந்து தேவகோபத்தை சந்தித்து தண்டனைக்குள்ளாகி நரக வேதனையை நித்தியத்திற்கும் அனுபவிக்கத் தொடங்குவார்கள் என்றும் வேதம் போதிக்கின்றது. நியாயத்தீர்ப்பு நாளில் பிசாசின் கொட்டத்தை அடக்கி அவனது இழி செயல்கள் அனைத்தையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவார் கிறிஸ்து. பிசாசின் கரத்திலிருக்கும் அவிசுவாசிகள் அவனோடு சேர்ந்து அந்நாளில் தண்டனைக்குள்ளாவதில் ஆச்சரியமில்லை.

*(கடந்த இதழில் கேள்வி எண் 40 என்றிருந்திருக்க வேண்டும். தவறாக 41 என்று கொடுக்கப்பட்டுள்ளது. இவ்விதழின் கேள்வி எண் 41 ஆகும். தவறுக்கு வருந்துகிறோம். - ஆசிரியர்)*

*நாடாளும் அரசியைத் தன் நாவன்மையால்
நடுங்கவைத்து, ஸ்கொட்லாந்தில் சீர்திருத்த விளக்கை
ஏற்றிவைத்த சிங்கம்.*

# ஜோண் நொக்ஸ்



முன் அட்டையில் நொக்ஸ்


ஸ்கொட்லாந்தின் மாபெரும் சீர்திருத்தவாதி ஜோண் நொக்ஸ் என்பது வரலாறு அறிந்த உண்மை. சீர்திருத்தவாதிகளில் எனது மனதைக் கவர்ந்த பெருமகன் நொக்ஸ். சீர்திருத்தப் போதனையும், வேதபூர்வமான ஆராதனையும் ஸ்கொட்லாந்து நாட்டுத் திருச்சபைகளை இன்றும் தொடர்ந்து அணி செய்கின்றன என்றால் அதற்குப் பெரும் காரணகர்த்தாவாக இருந்தவர் ஜோண் நொக்ஸ். பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பகாலப்பகுதியில் ஹெடிங்டன் என்ற இடத்தில் பிறந்து, கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பயின்று, உறுதியான ஒரு சீர்திருத்தவாதியாக மாறியவர் நொக்ஸ். சீர்திருத்தத்திற்கு எதிராகப் பெரும் எதிர்ப்புகள் ஸ்கொட்லாந்தில் தோன்றியபோது நொக்ஸ் ஐரோப்பாவிற்குப் போய்விடத் தீர்மானித்தார். ஆனால், ஸ்கொட்லாந்து அரசுக்கு உதவ பிரான்ஸில் இருந்து வந்திறங்கிய படையிடம் அவர் பிடிபட்டு 19 ஆண்டுகள் சிறையில் வாட நேர்ந்தது. நொக்ஸையும் அவரோடு பிடிபட்டவர்களையும் ரோமன் கத்தோலிக்க மதத்திற்குத் திருப்பப் பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், நொக்ஸ் இறுதிவரை எல்லா முயற்சிகளையும் எதிர்த்துப் போராடி தனது விசுவாசத்தில் உறுதியாக இருந்தார்.

விடுதலைக்குப்பின் சீர்திருத்தம் வளர்ந்து கொண்டிருந்த இங்கிலாந்துக்குப் போய் வாழத் தீர்மானித்தார் நொக்ஸ். அங்கே ஆறாவது எட்வர்ட் அரசரின் செப்ளின்களில் ஒருவராகப் பணிபுரியும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அரசி மேரி ஆட்சிக்கு வந்தபோது மறுபடியும் அவர் எதிர்ப்பைச் சந்திக்க நேரிட்டதால் ஜேர்மனியிலும், சுவிட்சர்லாந்திலும் போய் வாழத் தீர்மானித்தார். கல்வின் போதகராகப் பணிபுரிந்து கொண்டிருந்த ஜெனீவாவில் அவர் நான்கு வருடங்களை மிக மகிழ்ச்சியுடன் கழித்தார். ஜெனீவாவில் அவர் கழித்த நாட்கள் ஸ்கொட்லாந்தின் சீர்திருத்தத்திற்கு அவரைத் தயார் செய்தன என்றுதான் கூற வேண்டும். ஜெனீவாவின் சீர்திருத்தத்தைப் பற்றிக் கூறும் நொக்ஸ், “மற்ற இடங்களிலும் சீர்திருத்தம் ஏற்பட்டுள்ள போதும் வேறு எந்த இடத்திலும் இல்லாதவகையில் ஜெனீவாவில் சீர்திருத்தம் ஆழமாகப் பதிந்து சபைகளையும், மக்கள் வாழ்க்கையையும் மாற்றியுள்ளது” என்றார்.

1599 ஆம் ஆண்டில் அவர் மறுபடியும் ஸ்கொட்லாந்திற்குத் திரும்பி வந்தார். அங்கே மக்கள் மிகவும் குழப்பமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருந்ததைக் கண்டார். ஆறாவது ஜேம்ஸின் இறப்பிற்குப் பிறகு அவருடைய மகள் மேரி அரசுக்கு வந்திருந்தாள். மேரி குழந்தையாக இருந்ததால் தாயே ஆட்சிப் பொறுப்பைக் கவனித்துக் கொண்டாள். தாயின் பெயரும் மேரியே. நாடு திரும்பிய நொக்ஸ் சிலை வணக்கத்திற்கும் ரோமன் கத்தோலிக்க மதத்திற்கும் எதிராக்க் கடுமையான போராட்டத்தை ஆரம்பித்து, வேதசத்தியங்களை அறிந்துகொள்ளும்படி மக்களை வற்புறுத்தினார். நொக்ஸ் பிரசங்கம் செய்வதில் வல்லவராக இருந்தார். ஆயிரக்கணக்கானவர்கள் அவரது பிரசங்கத்தைக் கேட்டு கர்த்தருடைய வார்த்தையைத் தழுவிக் கொண்டனர். மனந்திரும்பிய மக்களும், அவருடைய ஆதரவாளர்களும் ரோமன் கத்தோலிக்க முறையில் அமைக்கப்பட்டிருந்த கட்டிடங்களைத் தரைமட்டமாக்கினர். போலிப்போதனைகளை பரப்ப உதவும் எதையும் தகர்த்தெறிவது நல்லதே என்று நொக்ஸ் அதைத் தடைசெய்யவில்லை.

ஸ்கொட்லாந்தில் சபை அமைப்பு இங்கிலாந்தைவிட வேறுபட்டு பிரஸ்பிடீரியன் முறையில் அமைந்ததற்கு ஜோண் நொக்ஸே காரணம். அதுமட்டுமல்லாமல், கல்வியிலும் பெரும் சீர்திருத்தங்கள் ஏற்பட நொக்ஸ் காரணமாக இருந்தார். திருச்சபை இருந்த ஒவ்வொரு பகுதியிலும் கல்விச்சாலைகளை அமைத்து, இளைஞர்களுக்கு இலத்தீன், கிறிஸ்தவம், இலக்கணம் ஆகியவற்றைக் கற்றுக்கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், இவற்றைவிட ஸ்கொட்லாந்து முழுவதும் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதையும், சீர்திருத்தக் கொள்கைகளை வளர்ப்பதிலுமே நொக்ஸ் அதிக நாட்டம் செலுத்தினார். தனது அதிரடிப் பிரசங்கத்தினால் அநேக எதிரிகளை நொக்ஸ் எதிர்நோக்க நேர்ந்தது. ரோமன் கத்தோலிக்க ஆராதனையைப் பற்றி நொக்ஸ், “பத்தாயிரம் எதிரிப்போர் வீரர்கள் என் நாட்டில் வந்திறங்குவதை விட ஒரு ரோமன் கத்தோலிக்க ஆராதனை எனக்கு மிகுந்த பயத்தை ஏற்படுத்துகின்றது” என்று கூறினார். ரோமன் கத்தோலிக்க ஆராதனை முறைகளை அவர் சாடி வந்தார். இதனால் அரசியை அடிக்கடி அவர் சந்திக்க நேர்ந்தது. அவரது வாதங்களைக்கேட்டு அரசியான மேரிக்கே நடுக்கமெடுத்திருக்கிறது.

ஜோன் நொக்ஸ் **1572** இல் இறைவனடி சேர்ந்தார். எடின்பரோவில் உள்ள அவரது கல்லறையில் பின்வரும் வாசகங்கள் காணப்படுகின்றன: “மனிதர்களுக்கு என்றுமே அஞ்சாத ஒரு மனிதன் இங்கே அயர்ந்திருக்கிறான்.” கிறிஸ்துவுக்காக வாழ்ந்து, வேதசத்தியங்களின் அடிப்படையில் சபைகள் அமைப்பதை நோக்கமாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுதும் உழைத்தவர் ஜோண் நொக்ஸ். நொக்ஸைப் போன்ற அஞ்சா நெஞ்சமும், வேத அறிவும், பிரசங்கத்திறனும் கொண்ட சீர்திருத்தவாதிகள் இன்று நிச்சயம் நமக்குத் தேவை. நொக்ஸின் சரிதம் நம்மைச் சிந்தித்து செயல்படத் தூண்டட்டும்.



# வில்லியம் கேரி

> “கர்த்தரிடமிருந்து பெரும் காரியங்களை எதிர்பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ் சாதனைகளைச் செய்யுங்கள்.”
> - கேரி

## தொடரும் சோதனைகள்

எதிர்பாராத எதிர்ப்புகள் மலைபோல் தம்முன் எழுந்து நிற்பதைப்பார்த்து மிஷனரிகள் கலங்கிய போதும் கர்த்தர் நிச்சயம் இதிலிருந்து விடுதலை தருவார் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. அவர்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. கூடியவிரைவிலேயே டேனிஸ் கவர்னர் கிராவ்டிங்கைச் சந்திக்க கேரிக்கு அனுமதி கிடைத்தது. கேரிக்கும், மார்ச்மனுக்கும் கவர்னர் ஜெனரலான லோர்ட் மின்டோவையும் சந்திக்க அனுமதி கிடைத்தது. இவர்களுடைய நண்பரான டாக்டர் லேய்டன் கவர்னர் ஜெனரலை சந்திக்கும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுரை செய்திருந்தார். கேரியும், மார்ச்மனும் தங்களுடைய வேத மொழி பெயர்ப்பு வேலைகளுடன், இராமாயண மொழிபெயர்ப்பையும் கொண்டு சென்றனர். அத்தோடு கவர்னர் ஜெனரல் படித்துப் பார்க்கும்படியாக தங்களுடைய ஊழியவிபரங்களையும் எழுதி அவர் முன் சமர்ப்பித்தனர். இவற்றையெல்லாம் பார்த்து வியந்த லோர்ட் மின்டோ மிஷனரிகள் பற்றித் தமக்குத் தவறாக செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளதை உடனடியாக உணர்ந்தார். டேனிஸ் கவர்னரும் மிஷனரிகளுக்காகப் பெரிதும் பரிந்து பேசினார். ஒரு மாதத்திற்குள் கவர்னர் ஜெனரல் தன்னுடைய முடிவுகளை மாற்றிக் கொண்டார். செராம்பூரில் இருந்து அச்சு வேலைகளை கல்கத்தாவிற்கு மாற்ற வேண்டியதில்லை என்று கேரிக்கு அறிவிக்கப்பட்டது. மிஷனரிகள் கர்த்தருக்குக் கண்ணீரோடு நன்றி கூறினர். இருந்தபோதும் அவர்கள் பிரசங்கம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை இன்னும் நீங்கவில்லை. இத் தடையை நீக்க மின்டோ தயங்கினார். கேரி, கோடிக்கணக்கான கையெழுத்துக்களைச் சேகரித்து இங்கிலாந்து அரசுக்கு அனுப்பி இத்தடைக்கு எதிராகச் செயல்படும்படி புளரை வற்புறுத்தினார்.

எல்லா எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கேரியின் மூலமும் அவருடைய சக மிஷனரிகளின் ஊழியத்தின் மூலமும் கர்த்தர் அநேகருடைய வாழ்க்கையில் தொடர்ந்து ஒளியேற்றி வந்தார். 1809 இல் லால் பஜார் சபைக்கட்டடத்தில் முதல் முறையாக ஆராதனை நடந்தது. சபை கட்டுவதற்கு ரூபாய் 30,000 செலவாயிற்று. இதற்கான அரைவாசிக்கு மேற்பட்ட பணம் உள்ளூரிலேயே சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மார்ச்மன் பத்து நாட்கள் அலைந்து ஆயிரம் பவுன்களைச் சேர்த்தார். கர்த்தர் அநேகரை லால் பஜார் சபை ஊழியத்தின் மூலம் தன்னிடத்தில் அழைத்துக் கொண்டார். இங்கிலாந்து நாட்டு கப்பல் அதிகாரியான எபநேசர் கெம்ப் ஒரு ஞாயிறு சபைக்கு வந்தார். கேரியின் பிரசங்கம் அவருடைய உள்ளத்தைத் தொட்டது. அன்றைய இரவே மனம் திரும்பி கர்த்தரை அம்மனிதர் அறிந்து கொண்டார். தான் என்றாவது கப்பலின் தலைவனாக உயர்வு பெற்றால் கேரியின் ஊழியரொருவருக்கு இலவசமாகப் பயணம் செய்யும் வாய்ப்பு அளிப்பதாகவும் முடிவெடுத்தார். 1824 இல் அதேவிதமாக மொய்ரா என்ற கப்பலின் தலைவனாக உயர்வு பெற்ற எபநேசர் யேட்சுக்கு கப்பலில் இலசவமாக பயணம் செய்யும் வாய்ப்பளித்தார். புளர் இதற்குப் பணம் கொடுக்க விரும்பியபோதும் எபநேசர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

கல்கத்தாவின் சிறைச்சாலை அதிகாரியாக இருந்த கோர்டன் என்பவர் தன் மனைவியோடு லால்பஜார் சபை ஊழியத்தின் மூலமாக கர்த்தரை அறிந்து கொண்டார். தன்னுடைய இருதயத்தைத் திறந்த இயேசுவின் ஊழியத்திற்காக தனது சிறையையும் கோர்டன் திறந்துவிட்டார். இப்படி அநேக ஆத்துமாக்கள் லால் பஜார் சபை மூலம் கர்த்தரைக் கண்டு கொண்டனர். **1806** இல் இருந்து **1809** வரை இங்கிலாந்தில் செராம்பூர் உழியத்திற்கு ஆதரவளித்தவர்களுக்கெதிராகக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. இவற்றிற்கெதிராகப் புளரும் கேரியின் நண்பர்களும் தளராமல் போராடி வந்தனர். “அவர்கள் கட்டுக்களை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்து போடுவோம்” என்போரைப்பார்த்து “பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்” என்று 2 ஆம் சங்கீதம் கூறுவதை நினைவுபடுத்துவதைப்போல் இவ்வெதிர்ப்புகள் எதுவும் மிஷனரிகளைத் தொடக் கர்த்தர் இடம் தரவில்லை. இந்திய நாட்டில் இயேசுவுக்கு எதிராக இன்று எழுந்திருக்கும் தீயசக்திகளும் அவரின் நற்செய்தி பலருக்கும் வாழ்வளிப்பதை ஒருபோதும் தடை செய்துவிட முடியாது.

# 1689 விசுவாச அறிக்கை

# திரித்துவம்

**அதிகாரம் 2 : பாகம் 3**

**விளக்கம்: அலன் டன் (Alan Dunn)**

**தமிழில்: ஆசிரியர்**

விசுவாச அறிக்கையின் இரண்டாம் அதிகாரத்தின் முதல் பாராவை கடந்த இதழில் விளக்கினோம். இவ்விதழில் அதன் ஏனைய பகுதிகளைத் தொடர்ந்து பார்ப்போம்.

*பாரா 2: கடவுள், ஜீவன், மகிமை, நற்குணம், பேரின்பம் அனைத்தையும் தன்னில் கொண்டும், தன்னில் இருந்தே பெற்றும், தனக்குள்ளும், தனக்காகவும், தன்னிறைவுடையவராய் ஓர் தனித்தன்மையைக் கொண்டு, தான் படைத்த படைப்புயிர்களிடமிருந்து எவ்வித மகிமையையும் பெறாது, அவற்றின் தேவையற்றுமிருக்கிறார். இதற்கு மாறாக தன் மகிமையைக் கடவுளே அவர்களுக்குள்ளும், அவர்கள் மூலமும், அவர்களிடத்தும், அவர்கள் மேலும் வெளிப்படுத்திக் காட்டுகிறார். உயிருள்ள அனைத்தும், தங்களுடைய நிலைபேற்றிற்கு அவரையே காரணகர்த்தராகக் கொண்டு, அவர் மூலமும், அவராலும், அவருக்காகவுமே வாழ்கின்றன. எல்லாப் படைப்புயிர்கள் மூலமாகவும், அவற்றிற்காகவும், அவற்றிற்குள்ளும், தான் விரும்பியதைச் செய்யும் முழுமையான இறை ஆண்மையுள்ள அதிகாரத்தை அவர் கொண்டிருக்கிறார். அவருக்கு சகலதையும் பற்றிய பூரண அறிவிருக்கின்றது. அவரது அறிவு படைப்புயிர்களில் தங்கியிராது எல்லையற்றதாகவும், தவறா நிலையுடையதாகவும் உள்ளது (அதாவது அவர் அன்றாடம் நிகழும் நிகழச்சிகளை அறிந்து கொள்வதற்கு, தேவதூதர்களிலோ மனிதரிலோ தங்கியிருக்கவில்லை). ஆகவே, எந்த நிகழ்ச்சியுமே அவரைப் பொறுத்தவரையில் தற்செயலானதோ, நிச்சயமற்றதோ அல்ல. அவர் தனது திட்டங்களிலும், செயல்களிலும், கட்டளைகளனைத்திலும் மகா பரிசுத்தர். தேவதூதர்களும், மனிதர்களும், தம்மைப் படைத்தவருக்கு அளிக்க வேண்டிய சகலவிதமான வழிபாட்டையும், ஊழியத்தையும், கீழ்ப்படிவையும், அவர் கேட்கச்சித்தமாயிருக்கின்ற எதையும் அவருக்குத் தர வேண்டியவர்களாயிருக்கின்றார்கள்.*

*யோபு 22:2, 3; சங். 119:68; 148:13; எசே. 11:5; தானி. 4:25, 34, 35; யோவான் 5:26; அப். 15:18; ரோமர் 11:34-36; எபிரே. 4:13; வெளி. 5:12-14.*

## கடவுளும் அவரது படைப்புயிர்களும் (பாரா 2)

### அ. தனது படைப்புயிர்களோடு கடவுளுக்குள்ள தொடர்பு

**1. கடவுளின் சுதந்திரம்**

*“கடவுள், ஜீவன், மகிமை, நற்குணம், பேரின்பம் அனைத்தையும் தன்னில் கொண்டும், தன்னில் இருந்தே பெற்றும், தனக்குள்ளும், தனக்காகவும், தன்னிறைவுடையவராய் ஓர் தனித்தன்மையைக் கொண்டு, தான் படைத்த படைப்புயிர்களிடமிருந்து எவ்வித மகிமையையும் பெறாது, அவற்றின் தேவையற்றுமிருக்கிறார். இதற்கு மாறாக தன்மகிமையைக் கடவுளே அவர்களுக்குள்ளும், அவர்கள் மூலமும், அவர்களிடத்தும், அவர்கள் மேலும் வெளிப்படுத்திக் காட்டுகிறார்.”*

இவ்வதிகாரத்தின் முதலாவது பாராவில் கடவுளின் சுயாதீனத்தைப்பற்றி சொல்லப்பட்ட உண்மையை மறுபடியும் இப்பாரா வலியுறுத்துகிறது. ஆனால், இப்பகுதியில் “பேரின்பம்” என்ற வார்த்தை சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை அடிப்படையில் மகிழ்ச்சி என்று பொருள்படும். அதாவது கடவுள் தன்னில் மகிழ்வுடைவராக இருக்கின்றார். தான் கடவுளாய் இருப்பதில் அவர் பேரின்பம் கொள்கிறார். தனது சித்தத்தை நிறைவேற்றுவதில் பேரானந்தம் கொள்கிறவராக இருக்கின்றார். அத்தோடு நற்செய்தியின் மூலம் தனது கிருபையை வெளிப்படுத்துவது கடவுளுக்குப் பேரானந்தம் அளிக்கிறது (1 தீமோ. 1:11). இப்பகுதி கடவுள் தன்னில் முழுச் சுதந்திரம் கொண்டவராகவும், பூரணமான தன்னிறைவுடையவராகவும், எவருடைய துணையும் தேவையற்றவருமாயும் இருக்கிறார் என்பதை விளக்குகிறது.

**2. தனது படைப்புயிர்கள் மேல் கடவுளுக்குள்ள இறை ஆண்மை**

*“உயிருள்ள அனைத்தும், தங்களுடைய நிலைபேற்றிற்கு அவரையே காரணகர்த்தராகக்கொண்டு, அவர் மூலமும், அவராலும், அவருக்காகவுமே வாழ்கின்றன. எல்லாப் படைப்புயிர்கள் மூலமாகவும், அவற்றிற்காகவும், அவற்றிற்குள்ளும், தான் விரும்பியதைச் செய்யும் முழுமையான இறை ஆண்மையுள்ள அதிகாரத்தை அவர் கொண்டிருக்கிறார்.”*

எல்லாப் படைப்புயிர்களினதும் தோற்றத்தின் ஊற்றாகவும், காரணகர்த்தாவாகவும் கடவுளே இருக்கிறார் (யோவான்

1:3). இப்பகுதி படைக்கப்பட்டவை மீது கடவுளுக்கு இருக்கும் இறை ஆண்மையை மறுபடியும் வலியுறுத்துகிறது. கடவுளின் சித்தத்தின் காரணமாகவே அவரால் படைக்கப்பட்டவைகள் நிலைபேறுடையவையாயிருக்கின்றன (வெளி. 4:11). சுயாதீனமுடையவராய்த் தனது சித்தத்தின்படி எதையும் செய்யும் கடவுளுடைய இறை ஆண்மையைப் புரிந்து கொள்வது சிலருக்குக் கடினமாயிருக்கின்றது. அரசனான நேபூக்காத்நாச்சார் அவ்வாறான மனிதன். தேவசித்தத்தை தானியேல் மூலம் அறிந்து கொள்ளும் ஆசீர்வாதம் கிடைத்திருந்தும், அவன் மனத்தாழ்மை இல்லாதவனாக கடவுளுக்கு சமமாக தன்னை உயர்த்திக்கொள்ள முயன்றான். தேவனுடைய பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பது போல் நேபூக்காத்நாச்சார் தனது செயலுக்கான தண்டனையைக் கடவுளிடம் இருந்து அனுபவிக்க நேர்ந்தது. அவன் மிருகத்தைப்போல் புல்லைத்தின்னும் நிலைக்குத் தள்ளப்பட்டான். அந்நிலையில் இருக்கும்போது அவனுக்குப் புத்தி உண்டாயிற்று. ஏழு வருட முடிவில் அவன் கடவுளை மகிமைப்படுத்தி சாட்சி சொன்னான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். (தானியேல் 4:34, 35).

**3. தனது படைப்புயிர்களைப்பற்றி கடவுளுக்கு இருக்கும் முழுமையான அறிவு**

*“அவருக்கு சகலதையும் பற்றிய பூரண அறிவிருக்கின்றது. அவரது அறிவு படைப்புயிர்களில் தங்கியிராது எல்லையற்றதாகவும், தவறாநிலையுடையதாகவும் உள்ளது (அதாவது அவர் அன்றாடம் நிகழும் நிகழச்சிகளை அறிந்து கொள்வதற்கு, தேவதூதர்களிலோ மனிதரிலோ தங்கியிருக்கவில்லை). ஆகவே, எந்த நிகழ்ச்சியுமே அவரைப் பொறுத்தவரையில் தற்செயலானதோ, நிச்சய மற்றதோ அல்ல.”*

**நமது இரகசியமான எண்ணங்கள், ஆசைகள், எதிர்பார்ப்புகள் அனைத்தும் கடவுளுக்குத் தெரிந்திருக்கின்றன.**

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலதும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது (எபிரே. 4:13). நமது இரகசியமான எண்ணங்கள், ஆசைகள், எதிர்பார்ப்புகள் அனைத்தும் கடவுளுக்குத் தெரிந்திருக்கின்றன (எரே. 17:10; சங். 139:1-6; நீதி. 20:27). அத்தோடு, நாம் நினைப்பதுபோல் கடவுள் நினைப்பதில்லை என்று விசுவாச அறிக்கை கூறுகிறது. நாம் ஒரு காரியத்தை செய்யத் தொடங்கிய பின், சந்தர்ப்ப மாற்றத்தால், செய்யத் தொடங்கியதை விட்டுவிட்டு வேறு எதையோ செய்ய முயல்கிறோம். கடவுள் இப்படிச் செயல்படுவதில்லை. அவர் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி நடத்தும் இறை ஆண்மை உடையவராக இருப்பதால் அவர் தான் செய்ய வந்ததை விட்டுவிட்டு வேறு எதையும் செய்ய வேண்டிய அவசியமில்லை (ஏசா. 46:9, 10). எதிர்பாறாமல் நடந்தது - தற்செயலாக நிகழ்ந்தது - போன்ற வார்த்தைகளுக்கே கடவுளின் அகராதியில் இடமில்லை. சந்தர்ப்பம், சூழ்நிலை அனைத்தும் அவரது கட்டுக்குள் அடங்கி இருக்கின்றன. அவரை எதுவும் கட்டுப்படுத்த முடியாது.

### ஆ. கடவுளோடு படைப்புயிர்களுக்குள்ள தொடர்பு

**1. படைப்புயிர்களும் பரிசுத்தமான கடவுளும்**

*“அவர் தனது திட்டங்களிலும், செயல்களிலும், கட்டளைகளனைத்திலும் மகா பரிசுத்தர்.”*

கடவுள் எப்போதும் பரிசுத்தமுள்ளவராக இருக்கிறார். அவருடைய செயல்கள் அனைத்தும் எப்போதும் பரிசுத்தமானவையாகவே இருக்கும். அவரில் மனிதர்கள் ஒருபோதும் குறைகாண முடியாது. அவர் நம்மிடம் எப்போதும் பரிசுத்தத்தையே எதிர்பார்க்கிறார். ஆகவே, அவருடைய நியாயப்பிரமாணம் பரிசுத்தமானது. அவருடைய கட்டளைகள் என்றும் பரிசுத்தமானவையாகவும் நல்லவையாகவும் உள்ளன (1 யோவான் 1:5; சங். 145:17; ரோமர் 7:12).

**2. படைப்புயிர்கள் தம்மைப் படைத்தவரை பரிசுத்தத்தோடு ஆராதனை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.**

*“தேவதூதர்களும், மனிதர்களும், தம்மைப் படைத்தவருக்கு அளிக்க வேண்டிய சகலவிதமான வழிபாட்டையும், ஊழியத்தையும், கீழ்ப்படிவையும், அவர் கேட்கச்சித்தமாயிருக்கின்ற எதையும் அவருக்குத் தர வேண்டியவர்களாயிருக்கின்றார்கள்.”*

கடவுள் நம்மைப்படைத்தவராயிருப்பதால் அதன் அடிப்படையில் நாம் அவரை சகல மரியாதைகளுடனும், பரிசுத்தத்துடனும் ஆராதிக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். பவுல் ரோமருக்கு எழுதிய முதலாம் அதிகாரத்தில் மனிதனின் மிக மோசமான செயலான விக்கிர ஆராதனை செய்யும் கொடுமையை வெளிப்படுத்துகிறார். எல்லாவற்றையும் படைத்த கடவுள் தன்னை மட்டுமே மனிதன் ஆராதனை செய்ய வேண்டுமென்று தெளிவாக அவனுக்கு வெளிப்படுத்தியுள்ளார். கடவுளைப்பற்றிய அறிவை சிருஷ்டி வெளிப்படுத்துகிறது. கடவுளே சிருஷ்டியின் மூலம் அதை வெளிப்படுத்துகிறார். ஆகவே, மனிதன் கடவுளை அறிந்து கொள்ள முடியாது என்றோ, அவரைத் தனக்குத் தெரியவில்லை என்றோ எந்தவிதமாகவும் சாக்குப் போக்குச் சொல்ல முடியாது (ரோமர் 1:19-20). முழு உலகமுமே கிறிஸ்துவை வழிபட வேண்டுமென்பதற்காகவே அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்டுள்ளது (பிலிப். 2:2:9-11). உலகத்தில் இருக்கும் தேவனின் சபையும், பரலோகத்திலே இருக்கும் தேவமக்களும் தேவ குமாரனாகிய கிறிஸ்துவையே இன்று ஆராதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## திரித்துவக் கடவுள்

*பாரா 3: அவரது எல்லையற்ற தெய்வீக உள்ளியல்பில் பிதா, வார்த்தை அல்லது குமாரன், ஆவியானவர் மூவரும் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறார்கள். சாரத்திலும், வல்லமையிலும், நித்தியத்திலும் அவர்கள் அனைவரும் ஒருவரே. அதேவேளை ஒவ்வொருவரும் பிரிக்கப்படாத முழுமையான தெய்வீகத்தையும் உடையவர்களாய் இருக்கிறார்கள். பிதாவானவர் வேறெந்த உயிரினத்தில் இருந்தும் பெறப்படவில்லை. அவர் எந்த ஒரு உயிரினத்தாலும் தோற்றுவிக்கப்*

*படாததோடு எந்தவொரு உயிரினத்திலிருந்தும் தோற்றுவிக்கப்படவுமில்லை. குமாரன் தந்தையிடமிருந்து நித்தியமாய்த்தோன்றினவராய் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் தந்தையிடமிருந்தும், குமாரனிடமிருந்தும், நித்தியமாய் வெளிப்படுகிறவராயும் இருக்கிறார். தொடக்கமற்ற மூவருமே எல்லையற்ற ஒரே கடவுளாய் இருப்பதால் அவர்களுடைய இயற்கைத் தன்மையையோ உள்ளியல்பையோ பிரித்துப் பார்க்கக்கூடாது. ஆனாலும், அவர்களுக்கிடையிலான தனிப்பட்ட உறவைக் குறித்தும் (அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் குடும்ப உறவு), அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் பல்வகையான செயல்கள் குறித்தும் வேதத்தில் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. கடவுளோடு எமக்குள்ள எல்லா ஐக்கியத்திற்கும் அவரிலேயே நாம் தங்கியிருப்பதால் நாம் பெறும் ஆறுதலுக்கும் திரித்துவத்தைக்குறித்த இந்தக் கோட்பாடே அடிப்படையாக அமைகின்றது.*

*யாத்தி. 3:14; மத். 28:19; யோவான் 1:14-18; 14:11; 15:26; 1 கொரி. 8:6; 2 கொரி. 13:14; கலா. 4:6; 1 யோவான் 5:7.*

### அ. திரித்துவம் பற்றிய விளக்கம்

#### 1. திரித்துவ அங்கத்தவர்களிடம் இருக்கும் ஐக்கியம்

*“அவரது எல்லையற்ற தெய்வீக உள்ளியல்பில் பிதா, வார்த்தை அல்லது குமாரன், ஆவியானவர் மூவரும் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கிறார்கள். சாரத்திலும், வல்லமையிலும், நித்தியத்திலும் அவர்கள் அனைவரும் ஒருவரே. அதே வேளை ஒவ்வொருவரும் பிரிக்கப்படாத முழுமையான தெய்வீகத்தையும் உடையவர்களாய் இருக்கிறார்கள்.”*

> **திரித்துவ அங்கத்தவர்களில் ஒருவர் மற்றவரைவிட தெய்வீகத் தன்மைகளை அதிகமாகக் கொண்டிருப்பதாக எண்ணிவிடக்கூடாது.**

விசுவாச அறிக்கை இப்பகுதியின் மூலம் தெய்வீகக் கடவுளில் மூன்று நபர்கள் (ஆட்கள்) இருப்பதை விளக்குகிறது. அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அத்தோடு விசுவாச அறிக்கை இவர்கள் ஒவ்வொருவரும் சாரத்திலும், வல்லமையிலும், நித்தியத்திலும் முழுமையான தெய்வீக இயல்பைக் கொண்டுள்ளார்கள் என்று கூறுகிறது. தெய்வீகத்தின் அடிப்படைத் தன்மைகளனைத்தையும் மூவருமே கொண்டுள்ளார்கள். இத்தெய்வீகத்தன்மைகள் பிதாவுக்குள் பாதியும், குமாரனுக்குள் பாதியும், ஆவிக்குள் பாதியுமாக இருப்பதாக எண்ணிவிடக்கூடாது. ஒருவர் மற்றவரைவிட இத்தெய்வீகத்தன்மைகளை அதிகமாகக் கொண்டிருப்பதாகவும் எண்ணக்கூடாது. ஒவ்வொருவரும் அத்தெய்வீகத் தன்மைகளை முழுமையாகக் கொண்டுள்ளனர். பிதா முழுமையாக கடவுளாக இருக்கிறார். அதேபோல் குமாரனும் முழுமையாக கடவுளாக இருக்கிறார். ஆவியும் முழுமையாக கடவுளாக இருக்கிறார். இவர்களைக் கடவுளின் பாதிகளாக எண்ணி விடக்கூடாது. இவர்களை ஒன்று சேர்ப்பதால் கடவுள் தோன்றுவதாகவும் எண்ணிவிடக்கூடாது. கடவுளில் மூன்று நபர்கள் இருந்தாலும் கடவுள் ஒருவரே.

திரித்துவம் என்ற வார்த்தை வேதத்தில் காணப்படாவிட்டாலும் அதுபற்றிய போதனை வேதத்தில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது (விசுவாச அறிக்கை - முதலாம் அதிகாரம், பாரா 6). அதாவது இப்போதனை வேதத்தின் பல பகுதிகளிலும் தெளிவாகக் காணப்படுகின்றது. அப்போதனைகளை ஒன்று சேர்த்துப் படித்து திரித்துவம் பற்றிய முழு உண்மைகளையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கிறது. பின்வரும் வேத வசனங்கள் திரித்துவத்தை விளக்குகின்றன (மத். 3:16, 17; 28:19; 2 கொரி. 13:14). திரித்துவப் போதனை வேதத்தின் அடிப்படைப் போதனைகளில் ஒன்று. இதை மறுப்பவர்களுக்கும், இதில் தெளிவற்றவர்களுக்கும் கிறிஸ்தவத்தோடு தொடர்பிருக்க முடியாது. வரலாற்றில் கிறிஸ்தவத்திற்கு எதிராக முளைத்த பல போதனைகள் திரித்துவக் கோட்பாட்டை எதிர்ப்பதாகவே இருந்தன. இன்று யெகோவாவின் சாட்சிகளும், செவன்த் டே அட்வென்டிஸ்ட் போன்றோரும் திரித்துவத்தைப் பற்றிய தவறான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள்.

பழைய, புதிய ஏற்பாடுகளுக்கிடையில் உள்ள தொடர்பைப் பற்றிப்பேசும் அகஸ்தீன், பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்து காணப்படுகின்றது என்றும், புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டை விளக்குகிறது என்றும் கூறினார். இது இவ்விரு ஆகமங்களுக்கிடையில் உள்ள சிறப்பான உறவாகும். ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தில் ஜலத்தின் மேல் ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார் என்று வாசிக்கிறோம். ஆதி. 1:1-2 திரித்துவத்தைப் பற்றிப் பேசுகிறது. திரித்துவத்தைப்பற்றிய முழுவிளக்கமும் இங்கில்லாவிட்டாலும் திரித்துவத் தேவனின் அங்கத்தவர்களை இங்கு நாம் பார்க்க முடிகின்றது. அவர்களே அனைத்தையும் காத்துக் கொண்டிருந்தனர். மேலும் தொடர்ந்து வாசிக்கும் போது கடவுள் மனிதனைப் படைத்ததைப் பற்றிய வேதப்பகுதி கடவுளைப் பற்றிப் பேசும்போது அவர் தம்மைப் பன்மையில் (நமது, Us) அழைப்பதைச் சுட்டிக் காட்டுகிறது. (ஆதி. 1:26, 27). ஆதி 11:5-7 இல் கடவுள் பாபேலை இடித்துத் தள்ளத் தீர்மானித்தபோது தம்மைப் பற்றிப் பன்மையில் (நாம் இறங்கிப் போய்) குறிப்பிடுவதைக் காணலாம் (Let us). இவற்றோடு பழைய ஏற்பாட்டில் தேவ தூதனைப் பற்றியும் (Angel of the Lord) பல இடங்களில் வாசிக்கிறோம். இத் தேவதூதன் கடவுளின் தூதர்களைவிட வேறுபட்டவர். திரித்துவத்தின் இரண்டாம் அங்கத்தவரே இவ்வாறாக பழைய ஏற்பாட்டில் செயற்பட்டதைப் பார்க்கிறோம் (யாத். 23:20). இவரை Pre-Incarnated Son of God என்று கூறுவார்கள். இவ்விதமாக மனித தோற்றத்தில் (Theophony) திரித்துவத்தின் இரண்டாம் அங்கத்தவர் பழைய ஏற்பாட்டில் தோற்றமளித்துள்ளார். பழைய ஏற்பாடு ஆவியானவரைப் பற்றியும் பேசுகிறது. தாவீது சங்கீதம் 51:11 இல், பரிசுத்த ஆவியை என்னில் இருந்து எடுத்துப் போடாதேயும் என்று கர்த்தரை நோக்கிப் பேசுவதைப் பார்க்கிறோம். பழைய ஏற்பாட்டில் சங். 2; ஏசாயா 49:1 ஆகிய பகுதிகளிலும் வேறு இடங்களிலும் திரித்துவ அங்கத்தவர்கள் தமக்குள் கலந்துரையாடுவதைப் பார்க்க முடிகின்றது. புதிய ஏற்பாட்டில் இயேசு தனது பிதாவோடு ஜெபத்தில் பேசுவதைப் பார்க்கிறோம். யோவான் 17 இல் காணப்படும் இயேசுவின் ஜெபம் மோசே எரியும் புதருக்கு முன் நடுங்கியதைப் போல நம்மை நடுங்க வைக்கும் ஜெபமாகும். தேவன் தேவனோடு பேசுகிற அற்புதத்தை வாசிக்கும் அருமையான வாய்ப்பை புதிய உடன்படிக்கையின் காலத்தில் நாமடைந்திருக்கிறோம்.

# தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்

ஒரு புதிய நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் நாம் தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள் எந்தளவுக்கு வளர்ந்திருக்கின்றன என்று சிந்தித்துப் பார்ப்பது அவசியமே. சில வருடங்களுக்கு முன் ஒரு இதழையே தமிழிமுள்ள கிறிஸ்தவ இலக்கியங்களை அடையாளம் காணவும், வாசகர்களிடம் அவற்றை வாசிக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அர்ப்பணித்தோம். அதற்குப்பின் நெடுங்காலமாக அது பற்றி எழுதாததாலும், எவ்வளவு தூரத்திற்கு இந்த இடைக் காலத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று ஆராய்ந்தறியவும் மீண்டும் எழுத வேண்டியது அவசியமாகிறது. கிறிஸ்தவ இலக்கியங்கள் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் புத்துணர்வூட்டி சீர்திருத்தத்தை ஏற்படுத்தி வேத பூர்வமான சபைகள் எழக் காரணமாக இருந்ததை பதினாறாம் நூற்றாண்டு சபை வரலாறு நமக்குத் தொடர்ந்தும் நினைவூட்டி வருகின்றது. மார்டின் லூதர், கல்வின் ஆகியோரது எழுத்துப்பணியும், அவர்களுடைய காலத்துக்குப் பின்பு தோன்றிய பியூரிட்டன் போதகர்களின் சிறப்பான எழுத்துப் பணியும் கிறிஸ்தவத்திற்குச் செய்துள்ள தொண்டிற்கு இணையாக இன்று எதையும் காண முடியாது. எனவே, கிறிஸ்தவ இலக்கியங்கள் வளர்ந்த காலப்பகுதிகளில் கிறிஸ்தவம் தலை நிமிர்ந்திருந்தது கண்கூடு. கிறிஸ்தவத்தின் வளர்ச்சி கிறிஸ்தவ இலக்கியங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததா? அல்லது கிறிஸ்தவ இலக்கியங்கள் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தனவா? என்ற கேள்வியும் நியாயமானதே. வரலாற்றைப் பார்த்தால் ஒன்றிருந்த இடத்தில் மற்றதும் இருந்தது என்ற முடிவுக்கே நம்மால் வரமுடிகின்றது. ஆகவே, ஒன்றில்லாமல் மற்றது இருக்க முடியாது என்பதையும் சொல்லிப் புரியவைக்க வேண்டியதில்லை.

## தமிழர் மத்தியில் கிறிஸ்தவம்


கிறிஸ்தவத்தைப்பற்றிய தவறான சிந்தனைகள் தமிழர் மத்தியில் இருப்பதை இவ்விதழில் வந்துள்ள "தமிழில் கிறிஸ்தவ இதழ்கள்" என்ற ஆக்கத்தில் சுட்டிக் காட்டியுள்ளேன். தவறாக ரோமன் கத்தோலிக்க மதத்தையும், யேகோவாவின் சாட்சிகளையும், அட்வென்டிஸ்ட் சபையாரையும் கிறிஸ்தவர்களாக எண்ணிவருகிறார்கள் பலர். இவற்றிற்கும் கிறிஸ்தவத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை. மேற்குறிப்பிட்ட சபைகள் கிறிஸ்தவ வேதத்தின் அதிகாரத்தையும், அதன் போதனைகளையும் நிராகரிக்கின்றன. ஆகவே, வேதமும் அவற்றை அங்கீகரிப்பதில்லை. "யாதும் ஊரே; யாவரும் கேளீர்" என்பது சங்க காலப்பாடல் வரி. அதற்குப் பொருள் எல்லாம் நம் ஊர்; எல்லோரும் நம் உறவினர்கள் என்பது. அதேபோல் எல்லாம் கிறிஸ்தவம்; எல்லோரும் கிறிஸ்தவர்கள் என்ற தவறான சமய சமரசப் போக்கே தமிழ்க் கிறிஸ்தவர்களிடம் உலவி வருகிறது. அதே வேளை, தமிழர்கள் மத்தியில் காணப்படும் கிறிஸ்தவ சபைகளும், ஊழியங்களும் பெரும்பாலும் பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் இயக்கங்களின் பாதிப்புக்குள்ளானவையாகவும், சபைத்தொடர்பற்ற, சுயாதீன நிறுவன (தனி) ஊழியங்களாகவுமே காணப்படுகின்றன. கெரிஸ்மெட்டிக், பெந்தகொஸ்தே இயக்கங்கள் மனிதனின் உணர்ச்சிக்குத் தூபமிட்டு அவனை சிந்திக்கவிடாமலும், வெறும் அனுபவத்தையும் அற்புதங்களையும் நாடும்படியும் செய்திருப்பதால் இவ்வியக்கங்களைச் சார்ந்தோர் வேதத்தை மூட்டைகட்டி வைத்துள்ளனர். இத்தோடு ஆடல், பாடல்களும், கூத்துக்களும் இன்று சபைகளை ஆள்கின்றன. சுயாதீன, நிறுவன ஊழியங்கள் சத்தியத்தில் ஆழமில்லாதவைகளாகவும், உப்புச்சப்பில்லாத விதத்தில் சுவிஷேசத்தை சொல்லி எப்படியாவது, எதைச்செய்தாவது கிறிஸ்துவுக்கு ஒரு கூட்டத்தை சேர்த்துவிடுவது மட்டுமே நமது கடமை என்ற முறையிலும் செயல்பட்டு வருகின்றன. இவற்றிற்கு மத்தியில் வேதத்திற்கு மதிப்புக் கொடுக்கும் ஒரு சில சகோதர அமைப்பு (Brethren) சபைகளும், பாப்திஸ்து சபைகளும், பிரஸ்பிடீரியன் சபைகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், இவை பெருங் கடலில் எதிர் நீச்சலடித்துக் கொண்டிருக்கும் சிறு தோணிகளாகவே உள்ளன. வேதத்தை அடிப்படையாகக் கொண்டு அமையாத இயக்கங்களும், சபைகளும் நிறைந்த ஒரு குழப்பமான சூழ்நிலையிலேயே இன்றைய கிறிஸ்தவம் இவ்வுலகில் ஏழு கோடித் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இத்தகைய கிறிஸ்தவ சூழல் இதில் தோன்றும் இலக்கியங்களை எப்படிப் பாதிக்காமல் இருக்க முடியும்?

## தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்

தமிழில் காணப்படும் தரமான கிறிஸ்தவ இலக்கியங்களை நாம் விரல் விட்டு எண்ணிவிடலாம். புற்றீசல் போல் ஆயிரக் கணக்கில் தமிழகத்தில் இருந்தும், அதற்குப் புறத்தில் ஸ்ரீ லங்கா, மலேசியா போன்ற நாடுகளிலிருந்து சிறிய அளவிலும் கிறிஸ்தவ நூல்கள் வெளியிடப்பட்ட போதும் அவற்றில் பெரும்பாலானவை வெறும் குப்பைகளாகவே இருக்கின்றன. அவை எந்த வித வேத ஆதாரமுமில்லாத போதனைகளைத் தாங்கி வருபவையாக உள்ளன. இவற்றிற்கு தமிழ் நாட்டு சாம் ஜெபத்துரையின் நூல்களை உதாரணத்திற்குக் கூறலாம். எழுதுவதெல்லாம் இலக்கியமாகிவிடாது என்பதற்கு இவரது நூல்கள் நல்ல எடுத்துக்காட்டு. இன்று வெளிவரும் பல நூல்களில் ஆழமான சத்தியத்தையோ, ஆய்வுத்திறனையோ, அழகுபடச்சொல்லும் எழுத்து நடையையோ காண முடியவில்லை. இவற்றில் பெரும்பாலானவை ஆத்துமாக்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஆபத்தைத் தேடித் தருபவை. இதற்குக் காரணம் நம் மத்தியில் இருக்கும் கிறிஸ்தவ சூழ்நிலையே என்பதை மறுக்க முடியாது.

கிறிஸ்தவ இலக்கியம் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு சில வரைகோள்கள் உள்ளன. (1). கிறிஸ்தவ இலக்கியங்கள் வேதத்தின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு அதன் போதனைகளை மட்டுமே எடுத்துக் கூறுபவையாகவும், கிறிஸ்தவர்களால் மட்டுமே எழுதப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். (கிறிஸ்தவரல்லாத கவிஞர் கண்ணதாசனின் "இயேசு காவியம்" கிறிஸ்தவ இலக்கியமல்ல.) (2) கிறிஸ்தவ இலக்கியங்கள் வேதத்தின் எந்தப் போதனையை எடுத்து விளக்கினாலும் வேதத்திற்கு முரணான எந்த அம்சங்களையும் தன்னில் கொண்டிருக்கக்கூடாது. (3) கிறிஸ்தவ இலக்கியங்கள் கிறிஸ்தவர்களின் ஆத்மீக வாழ்க்கைக்கு உதவுவனவாகவும், அவர்கள் பரிசுத்த வாழ்க்கையில் வளரத் துணைபுரிபவனவாகவும் இருக்க வேண்டும். (4) கிறிஸ

(௨௨ ஆம் பக்கம் பார்க்க)




# தமிழில் கிறிஸ்தவ இதழ்கள்



சென்னையில் ஹிகின்ஸ்பொட்டம் புத்தக நிலையத்தில் - தமிழ்க் கிறிஸ்தவ இதழ்கள் ஓர் ஆய்வு - என்ற தலைப்பில் தமிழகத்தின் ஜனரஞ்சக வார இதழான ராணி ஆசிரியர் அ. மா. சாமி அவர்கள் எழுதி, சென்னை நவமணி பதிப்பகம் வெளியிட்டுள்ள ஒரு நூலை நான் பார்க்க நேர்ந்தது. அத்தகைய ஆய்வின் பலனென்ன என்று அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அதை நான் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினேன். நூலை வாசித்து முடித்தபின் அதுபற்றி எழுத வேண்டிய அவசியத்தை உணர்ந்தேன். கிறிஸ்தவ இறையியலை மட்டுமே அறியத்தரும் நமது இதழில் இத்தகைய ஆக்கங்களுக்கு இடம் கொடுப்பதில்லை என்பது வாசகர்கள் அறிந்த உண்மை. இருந்தாலும் கிறிஸ்தவத்தை கிறிஸ்தவரல்லாதவர்கள் எக்கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள் என்பதை நாமெல்லோரும் ஓரளவுக்குத் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், கிறிஸ்தவ இதழ்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பற்றி கிறிஸ்தவர்களாகிய நாம் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் இதனை நான் எழுதத் தீர்மானித்தேன்.

நூலாசிரியரான அ. மா. சாமி ஒரு கிறிஸ்தவரல்ல. கிறிஸ்தவரல்லாத ஒருவர் கிறிஸ்தவ இதழ்களை எவ்வாறு ஆராய்ந்துள்ளார் என்று அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் நூலைப் படித்தேன். உண்மையில் ஆசிரியர் பலமுக்கிய கிறிஸ்தவ பிரமுகர்களையும், பத்திரிகையாளர்களையும் சந்தித்துப் பேசியும், பல இடங்களுக்குப் போயும் நல்லபல தகவல்களைச் சேகரித்துத் தந்துள்ளார். தமிழில் எப்போது எழுத்துக்கள் அச்சில் கொண்டு வரப்பட்டன, தமிழில் முதலில் அச்சில் வந்த கிறிஸ்தவ நூலெது? என்பது போன்ற தகவல்களும் இவைபற்றி அறிந்து கொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கு நிச்சயம் பயன்படும்.

கிறிஸ்தவ இதழ்கள் என்ற பெயரில் தமிழில் 1500 க்குக் குறையாத இதழ்கள் வெளிவந்துள்ளன என்ற ஆசிரியரின் கூற்றை ஏற்றுக்கொளள்ள முடியாது. ஏனெனில் தனது பட்டியலில் ஆசிரியர் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த இதழ்களையும், கிறிஸ்தவ இதழ்கள் என்ற பெயரில் உலவும் பொழுது போக்கு, அரசியல், கலை இதழ்களையும் சேர்த்துக் கொண்டுள்ளார். ஆகவே, இவையனைத்தையும் ஒட்டுமொத்தமாக “கிறிஸ்தவ” இதழ்கள் என்று கூறமுடியாது. இவ்விதழ்களில் பெரும்பாலானவை தமிழகத்தில் இருந்து வெளிவந்துள்ளன. ஆசிரியர் மலேசியா, ஸ்ரீ லங்கா மற்றும் மேலை நாடுகளில் இருந்து வெளியிடப்பட்டுள்ள இதழ்கள் பற்றியும் குறிப்புகள் தந்துள்ளார். இவ் நூலை வாசித்தபோது இரண்டு அம்சங்களைப்பற்றி அறிந்து கொள்வது எனது முக்கிய நோக்கமாக இருந்தது. தமிழில் உள்ள கிறிஸ்தவ இதழ்கள் யாவை? அவை எவ்வாறு தோன்றின? என்று அறிந்து கொள்வது எனது முதலாவது நோக்கம். இதை நிறைவேற்றி வைப்பதில் ஆசிரியர் நிச்சயம் உதவினார் என்றுதான் கூற வேண்டும். எனது அடுத்த நோக்கம் கிறிஸ்தவ இதழ்கள் பற்றிய கிறிஸ்தவரல்லாத நூலாசிரியரின் கணிப்பு என்ன? என்பது. இதில் எனக்கு ஆச்சரியமும், அதே நேரத்தில் கவலை தரக் கூடிய அம்சங்களும் இருந்தன.

## *இது வேதபூர்வமான கிறிஸ்தவத்தின் அடிப்படையில் அமைந்த ஆய்வல்ல*

கிறிஸ்தவரல்லாத இந்நூலாசிரியர் கிறிஸ்தவத்தைப்பற்றிய அரைகுறை அறிவுடன் இவ்வாய்வை மேற்கொன்டுள்ளார். தமிழ்மக்கள் மத்தியில் கிறிஸ்தவம் என்பது ரோமன் கத்தோலிக்க மதம், யெகோவாவின் சாட்சிகள் (காவற்கோபுரம்), யேசுவிஸ்ட், அட்வன்டிஸ்ட் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு மதம் என்ற எண்ணம் பரவலாக நிலவுகிறது. ரோமன் கத்தோலிக்க மதத்தில் இருந்து பிரிந்து சென்ற கிரேக்க வைதீக சபையும் (Greek Orthodox Church) கிறிஸ்தவ சபையாகவே இந்நூலில் காட்டப்பட்டுள்ளது. ரோமன் கத்தோலிக்க மதத்திலிருந்து பிரிந்து சென்ற சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் (Protestant) ஏன் பிரிந்து சென்றார்கள் என்ற விளக்கம் புரியாமல் அவர்களைத் தொடர்ந்து ரோமன் கத்தோலிக்க சமயத்தோடு சம்பந்தப்படுத்தியும் இந்நூலில் காட்டப்பட்டுள்ளது. இந்நூலை வாசிப்பவர்களுக்கு கிறிஸ்துவின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளும் அனைவருமே கிறிஸ்தவர்கள் என்ற தப்பான எண்ணமே ஏற்படும் என்று கூறினால் அது மிகையாகாது. இதுவே இந்நூலாசிரியருடைய எண்ணமுமாகும். இத்தகைய எண்ணத்தையே நூலாசிரியருக்குத் தகவலளித்துள்ளவர்கள் தந்துள்ளார்கள். ரோமன் கத்தோலிக்க இதழ்கள் இந்நூலில் கிறிஸ்தவ இதழ்களாகப் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. கிறிஸ்தவரல்லாத ஒருவர் கிறிஸ்தவத்தைக் குறித்து எழுத முனையும்போது இத்தகைய தவறுகள் ஏற்படுவதில் ஆச்சரியமில்லை. அத்தோடு தமிழகத்து கிறிஸ்தவர்கள் மத்தியில் முக்கிய பிரமுகராக இருக்கும் தலித் விடுதலைத் தளபதி என்று அழைக்கப்படும் பேராயர் எஸ்ரா சற்குணம் (இந் நூலுக்கு அணிந்துரை அளித்துள்ளார்), தயானந்தன் பிரான்ஸிஸ் போன்றோரின் சமய சமரசக் கோட்பாடுகளினாலும், அரசியல் நடவடிக்கைகளினாலும் கிறிஸ்தவர்களே குழம்பிப்போகும்போது, கிறிஸ்தவத்தைப் பற்றிய தப்பான எண்ணங்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களு

க்கு ஏற்பட்டிருப்பதில் ஆச்சரியம் இருக்க முடியாது. ஆகவே, இந்நூல் தமிழில் வெளிவந்துள்ள கிறிஸ்தவ இதழ்கள் பற்றிய ஆய்வு என்ற தலைப்பைக் கொண்டிருந்த போதும், மெய்க் கிறிஸ்தவத்தின் அடிப்படையில் வெளிவந்துள்ள இதழ்களை வேதபூர்வமான கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் ஆராயும் ஒரு நூலென்று கூற முடியாது.

## தென்னிந்தியாவில் கிறிஸ்தவத்தின் ஆரம்பம்

தென்னிந்தியாவிற்கு கிறிஸ்தவம் எப்போது வந்தது என்பது பற்றி எழுதும் எல்லோருமே தோமையரைப்பற்றி எழுதாமல் இருக்க மாட்டார்கள். வாய்வழிவந்து பரவியுள்ள, நம்பத்தகுந்த வரலாற்று ஆதாரமெதுவுமே இல்லாத தோமையரின் தென்னிந்திய வருகையின் அடிப்படையில் உலவும் கண்மூடித்தனமான நம்பிக்கைகளுக்கு அளவே இல்லை. இந்துவிற்கு ஒரு இராமர் என்றால் நமக்கும் ஒருவர் வேண்டாமா? என்பது போல்தான் தோமையர் பற்றிய கதைகள் உள்ளன. அது மட்டுமல்லாமல் கிறிஸ்தவத் திருமறைக்குப் புறம்பான பல போதனைகளுடன் அப்போஸ்தலர்களில் ஒருவரான தோமையரைச் சம்பந்தப்படுத்திப்பேசும், எழுத்துக்களும் அதிகம். இத்தகைய தகவல்களின் அடிப்படையில் நூலாசியர் தென்னிந்தியாவில் கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தை வர்ணித்துள்ளார்.

1612 ஆம் ஆண்டில் இலண்டனில் இருந்து கிழக்கு இந்தியக் குழு இந்தியாவுக்கு வந்தபோது அவர்களுடன் சீர்திருத்தக் கிறிஸ்தவம் இந்தியாவுக்கு வந்தது. 1706 இல் டேனிஸ் மிஷனரியான சீகன்பால்டு தரங்கம்பாடி வந்தார். 1792 இல் வில்லியம் கேரி இந்தியாவுக்கு வந்தார் என்பது வரலாறு.

## கிறிஸ்தவர்களின் தமிழ்த்தொண்டு

இந்தியாவிற்கு அச்சுக்கலையைக் கொண்டு வந்தவர்கள் கிறிஸ்தவர்கள். இந்தியாவில் அச்சிடும் தாள் தயாரித்தவர்கள் கிறிஸ்தவர்கள். இந்தியாவில் அச்சிடும் மைத்தொழிற்சாலை அமைத்தவர்கள் கிறிஸ்தவர்கள். இந்தியாவில் முதல் நூலைத் தயாரித்தவர்களும் கிறிஸ்தவர்களே. இத்தனைப் பெருமைகளுக்கும் தாயகமாக இருந்தது தமிழகமே என்ற உண்மையை இந்நூல் சுட்டிக்காட்டுகிறது. இந்தியாவின் முதல் தாள் ஆலையும், மை ஆலையும் தரங்கம்பாடியிலேயே அமைக்கப்பட்டன. டேனிஸ் சீர்திருத்த சபையைச்சேர்ந்த சீகன்பால்டே 1714 ல் நற்செய்தியையும், பழைய ஏற்பாட்டுப் பகுதிகளையும் முதலில் தமிழில் தரங்கம்பாடியில் அச்சிட்டார். தமிழில் முதலாவது வெளிவந்த இதழ் "தமிழ் மெகசின்" என்ற பெயரில் மாத இதழாக சென்னையில் இருந்து 1831 இல் வெளியிடப்பட்டது.

கிறிஸ்தவத்தைப்போல் எந்த மதமும் தமிழுக்குத் தொண்டாற்றவில்லை என்று கூறும் ஆசிரியர், இன்று நாம் படிக்கும், எழுதும் உரைநடைத்தமிழை உயிருள்ள மக்கள் தமிழாக்கியவர்கள் கிறிஸ்தவத்தொண்டர்களே என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இத்தமிழ்ப் பணியில் கத்தோலிக்கருக்கும் பெரும் பங்குண்டு என்பதை நாம் மறுக்க முடியாது. தமிழில் உரைநடை ஆரம்பத்தில் இல்லாமலில்லை. ஆனால், அன்றைய நடையில் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி இருக்கவில்லை. முற்றுப்புள்ளி கிடையாது. எறும்புக்கூட்டம் ஊறுவதுபோல் வரிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். கிறிஸ்தவ ஊழியர்களே பேச்சுத் தமிழை உரைநடைத்தமிழாகவும், வீட்டுத் தமிழாகவும் மாற்றினார்கள். தமிழ்த் தொடரை சந்தி பிரித்து எழுதியதோடு கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி போன்றவற்றையும் அறிமுகப்படுத்தினார்கள். கிறிஸ்தவர்களுடைய தமிழ்ப்பணிக்கு உறுதுணையாக இருந்தது அச்சுதான். ஆசிய மொழிகளில் முதன் முதலில் அச்சுக் கண்டது தமிழே. அது மட்டுமல்லாது காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டு வந்த தமிழ் வரிவடிவம் மாறாது நிலைபெற்றதற்கும் கிறிஸ்தவமே காரணம். ஐரோப்பாவின் சீர்திருத்தக் கிறிஸ்தவம் பரவ அச்சின் ஆற்றல் ஒருகாரணமாக இருந்ததை உணர்ந்து சீர்திருத்தக் கிறிஸ்தவ மிஷனரிகள் தென்னிந்தியாவிலும் அச்சுப் பணியை ஆரம்பித்து அதில் முன்னோடிகளாக இருந்தனர். அக்காலத்தில் பெரும்பாலான அச்சகங்கள் அவர்கள் வசமே இருந்தன.

## கிறிஸ்தவத் தமிழ்

ஆரம்பத்தில் தமிழில் கிறிஸ்தவ வேதவிளக்கங்களைத் தர முனைந்தவர்கள் அதிகமாக வடமொழிக்கலப்புள்ள ஒரு எழுத்து நடையை உருவாக்கிவிட்டதையும் நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். இத்தகைய போக்கு கிறிஸ்தவர்களுக்கே தனியாக ஒரு கிளை மொழியை ஏற்படுத்திவிட்டது என்கிறார் சாமி. ஆரம்பத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் தமிழில் எழுத முனைந்தவர்கள் பெரும்பாலும் ஐரோப்பிய மிஷனரிகளாக இருந்தே இதற்குக் காரணம். ஆனால், இது நாளடைவில் மாற்றமடையாமல் தொடர்ந்து நிலைத்து கிறிஸ்தவர்களுக்கே சொந்தமான ஒரு தனி கிளை மொழியை (Dialect) உருவாக்கி விட்டது. உதாரணத்திற்கு சர்வேசுவரன், தேவன், இரட்சகர், ஆத்துமா, ராச்சியம், சித்தம், ஏகாதிபத்தியம் போன்ற சொற்களைக் கூறலாம். சாகித்திய அகாடமி பரிசு பெற்ற "புதிய உரைநடை" என்ற தனது நூலில் பேராசிரியர் டாக்டர் இராமலிங்கம், தரமற்ற எழுத்து நடையைப்பற்றி விளக்கும்போது, "விவிலியத்தமிழ் என்று பிரித்துப் பேசும் அளவுக்கு ஒரு புதிய தமிழே உருவாகியுள்ளது" என்று இந்நூலாசிரியரின் கருத்தையே பிரதிபலிக்கிறார். தமிழில் வடமொழி மற்றும் திசைச் சொற்கள் இருந்தபோதும் அவற்றைத் தேவைக்கேற்பவே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சென்னையில் நான் சந்தித்துப் பேசிய தமிழறிஞராகிய, தஞ்சாவூர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் இதுபற்றிக் குறைபட்டுக் கொண்டார். கிறிஸ்தவரல்லாத அப்பெரியவர், என்னைப் பார்த்து நீங்கள் எங்களுக்கு உதவும் வகையில் ஏன் நல்ல தமிழில் கிறிஸ்தவ விளக்கங்களைக் கொடுக்கக் கூடாது? என்று கேட்டதில் எந்தத் தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு இத்தகைய எழுத்து நடை தடையாக இருக்கிறது என்று நூலாசிரியர் நமது கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதை நாம் வரவேற்கத்தான் வேண்டும்.

## கிறிஸ்தவ இதழ்களின் தரம்

1812 முதல் 1996 வரையில் வெளிவந்துள்ள இதழ்களை ஆராய்ந்துள்ள நூலாசிரியரின் ஆய்வைப் பார்க்கும்பேது மேல்நாடுகளில் இருந்து ஆங்கிலத்தில் வெளிவரும் இதழ்களின் அளவிற்கு தமிழில் தரமான கிறிஸ்தவ இதழ்கள் வெளிவந்துள்ளனவா என்பது சந்தேகமே. "தரமான கிறிஸ்தவ இதழ்" என்று கூறும்போது வேதபூர்வமான இறையியலின் அடிப்படையில் மட்டும் அமைந்த ஆக்கங்களைக்கொண்டு கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் வகையிலும், கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பயன்படும்விதத்திலும் வெளிவரும் இதழ்களை மட்டுமே நான் குறிப்பிடுகிறேன்.

இந்நூலில் பெரும்பாலான இதழ்களைப்பற்றிய விபரமான குறிப்புகளைப் பெற முடியவில்லை. அதனால் பல இதழ்களின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள முடியாமலிருக்கிறது. தனது பட்டியலில் ஆசிரியர் கிறிஸ்தவப் பெயர் கொண்டவர்களையும், கத்தோலிக்கர்களையும் ஆசிரியர்களாகக்கொண்டு வெளிவரும் முற்போக்கு, அரசியல், இலக்கிய இதழ்களையும், திரைப்படச் செய்திகளைத் தாங்கி வரும் இதழ்களையும், ஊர் நடப்புகளை விளக்கும் நாளிதழ்களையும் இணைத்துக் கொண்டுள்ளார். உதாரணத்திற்கு, டொமினிக் ஜீவாவின் முற்போக்கு சிற்றிதழான "மல்லிகையையும்", நாளிதழான "தினத்தூதையும்", புலவர் தெய்வநாயகத்தின் "திராவிட சமயத்தையும்", கூறலாம். இவற்றை எப்படிக் கிறிஸ்தவ இதழ்களாகக் கருதலாம் என்பது புரியவில்லை. வரிக்குதிரைக்கு உடம்பில் வரி இருக்கிறது என்பதற்காக, உடம்பில் வரி இருக்கும் மிருகங்கள் எல்லாம் வரிக்குதிரைகளாகிவிட முடியுமா என்ன?

ஆக, இந்நூலில் தரப்பட்டுள்ள கத்தோலிக்கம் மற்றும் ஏனைய மத இதழ்களையும், வெறும் இலக்கிய, முற்போக்கு, அரசியல், திரைப்பட செய்திகளைத்தாங்கி வரும் இதழ்களையும் ஒதுக்கிவிட்டு கிறிஸ்தவர்களால் வெளியிடப்படும் கிறிஸ்தவ இதழ்கள் என்ற பெயரில் உள்ளவற்றை மட்டும் பார்த்தால் இவற்றில் பெரும்பாலானவை ஜெபக்குறிப்புகளைத்தாங்கி வரும் துண்டறிக்கைகளாகவே இருக்கின்றன. இவற்றையும் இதழ்கள் என்ற

வட்டத்திற்குள் ஆசிரியர் கொண்டுவந்துள்ளார்.

கிறிஸ்தவ இதழ்கள்பற்றி ஆசிரியர் தரும் பல சுவையான தகவல்களுடன் இவ்வாக்கத்தை முடிக்க எண்ணுகிறேன். நூலாசிரியர் கிறிஸ்தவரல்லாதவராக இருந்தபோதும் கிறிஸ்தவ இதழ்கள் என்ற பெயரில் வெளிவரும் பல இதழ்களின் குறுகிய நோக்கங்கள் அவருடைய கண்களுக்குத் தப்பவில்லை. இவற்றையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். கிறிஸ்தவ இதழாசிரியர்களும் வாசகர்களும் இவற்றைக் குறித்து சிந்திப்பார்ப்பது நல்லது.

நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ இதழ்கள் தமிழில் வெளிவந்துள்ளபோதும் இவற்றில் 90%மானவை மாத இதழ்கள் என்றும், அவையும் தொடர்ந்து மாத இதழ்களாக வெளிவரத் தடுமாறி பாதியில் நின்று விடுகின்றன என்றும் நூல் கூறுகிறது. ஒரு இதழின் பின்அட்டையைக் கொண்டு அது கிறிஸ்தவ இதழா இல்லையா என்று அறிந்து கொள்ளலாம் என்ற கூறும் ஆசிரியர், எல்லாக் கிறிஸ்தவ இதழ்களினதும் பின்பக்க அட்டை அநேகமாக ஒரே மாதிரியாக இருக்கிறது என்றும், If undeliverd kindly return to: என்று எல்லா இதழ்களிலும் இருக்கும் என்றும் கூறுகிறார்.

பெரும்பாலான கிறிஸ்தவ இதழ்கள் "தனிச்சுற்றுக்கு மட்டும்" என்று இருக்கும் என்றும், பலவற்றில் வெளிவந்த தேதியே இருக்காது என்றும் தெரிவிக்கிறார். தேதி இருந்தால் பழைய இதழ் என்று ஆகிவிடும் அதனால் தேதி அச்சிடுவது இல்லை என்று ஒரு ஆசிரியர் கூறியதாக நூல் தெரிவிக்கிறது. இதழ்களின் பெயர்களைக் கொண்டு கிறிஸ்தவ இதழ்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும் என்று கூறும் ஆசிரியர் சில தமிழ் இதழ்களுக்கு ஆங்கிலப் பெயர் மட்டுமே இருக்கிறது என்றும் கூறுகிறார். கிறிஸ்தவ பத்திரிகைகளை "தீபிகை" என்று கூறும் வழக்கமும் ஆரம்பத்தில் இருந்ததாக நூல் தெரிவிக்கிறது.

ஜெப இதழ்கள் பற்றி இந்நூல் பின்வருமாறு கூறுகிறது: "ஜெப இதழ்களில் சாட்சிகள் அதிகமாக இருக்கும். நிதி அனுப்புங்கள் என்ற கோரிக்கைக்கு குறைவே இருக்காது. இந்த இதழ்களுக்காகத்தான் பேச்சிலே ஏசு! மூச்சிலே காசு! என்ற பழமோழி எற்பட்டது போலும்! "சமாதான பிரபு" என்ற இதழின் ஆசிரியர் போதகர் ஜேம்ஸ் சந்தோஷம் சொந்த வீடு வாங்கப் பணம் கேட்கிறார். 1996 ஜூன்–ஜூலை இதழில் அவர் எழுதியிருப்பது: தற்போது குடியிருக்கிற வீட்டை உடனடியாகக் காலி செய்ய வேண்டும் என்ற நிலையில் போதகர் இருக்கிறார். ஜூன் மாதத்தில் வேறு வீட்டிற்கு குடியேற வேண்டும். நம் போதகருக்கு சொந்த வீடு இருந்தால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படாமல் இருக்கும் அல்லவா! எனவே, தேவன் அவருக்கு சொந்த வீட்டைக்கட்டித்தரும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். அதே நேரத்தில் சொந்தமாக வீடு வாங்குவதற்கும் போதகரிடத்தில் பணமில்லை! கர்த்தர் அற்புதம் செய்தால்தான் சொந்த வீடு கிடைக்கும்! உங்களால் முடியுமானால், கர்த்தர் ஏவுதல் கொடுத்தால், இதற்காக உதவி செய்யுங்கள்."

கிறிஸ்தவ இதழாசிரியர்களில் பலர் ஆசையின் காரணமாகவே இதழ் நடத்துகிறார்கள் என்பது நூலாசிரியரின் கணிப்பு. இவர்களுக்கு "இதழியல் உத்தி எள்ளளவும் தெரிவதில்லை. மளமளவென்று எழுதி, அச்சிட்டு, இதழ் என்று வெளியிட்டு விடுகிறார்கள். அதனால்தான் மிக விரைவிலேயே கடை விரித்தோம், கொள்வார் இல்லை என்று மூடிவிடுகிறார்கள். கிறிஸ்தவ இதழ்களின் விற்பனையும் குறைவு. ஆயிரம் இதழ்கள் விற்பனையாகும் இதழ்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். வாசகர் வட்டம் மிகச்சிறியது. பாளையங்கோட்டையிலும், நெல்லையிலும் மட்டும் இருநூறு இதழ்கள் வெளிவருகின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!" என்கிறார் சாமி. கிறிஸ்தவ இதழ்களைப் பணம் கொடுத்து வாங்கிப்படிக்க கிறிஸ்தவர்கள் முன் வர வேண்டும். அதேவேளை பணம் கொடுத்து வாங்கிப் படிக்கத்தகுதியுள்ள தமிழ்க் கிறிஸ்தவ இதழ்களை இன்று கண்டுபிடிப்பதும் கல்லில் நார் உரிப்பது போல் கஷ்டமாகவே இருக்கிறது என்ற உண்மையையும் நாம் உணர வேண்டும்.

தனிப்பிரசங்கிமார் வெளியிடும் இதழ்களைப்பற்றி கிறிஸ்தவ இதழாசிரியரான ஆர். எஸ். ஜேக்கப் என்பவரின் கருத்தை நூல் விளக்குகின்றது. "தனிப்பிரசங்கிமார் வெளியிடும் இதழ்களில் பல தனிமனித வழிபாடாகவும் – இருளில் இருக்கிற மக்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரமுடியாதபடி புதிய புதிய மூடக் கருத்துக்களை வளர்ப்பனவாகவும் – மக்களிடமிருந்து நன்கொடை வசூலிப்பவனவாகவும் உள்ளன."

ஜெப இதழ்கள் இலவசமாக தரப்படுகின்றன. ஆனால், காணிக்கை கேட்கிறார்கள்! கானிக்கை அல்லது நன்கொடை பெறுவதில்தான் எத்தனைபாடு! என்று ஆசிரியர் விளக்குகிறார்.

"இவ்வூழியத்திற்கு சந்தாவாகக்குறிப்பிட்ட தொகை நிர்ணயிக்கப்படவில்லை. கர்த்தர் உங்களோடு பேசுகின்றபடி செய்யுங்கள்" – வளரும் செடி (மார்ச் 96)

"இம்மாத இதழை அச்சடிக்க எனது மோட்டார் சைக்கிளை விற்கிறேன்" – என் நேசரின் கடிதம் (ஜூலை 94)

"இப்பத்திரிகை சந்தாப்பத்திரிகையுமல்ல. அதே சமயம் இலவச பத்திரிகையுமல்ல. ரொம்ப நாளாக ஓசிக்குப் படிப்போர் இதை நினைவில் வையுங்கள்" – வான்சுடர் (ஜூலை 94)

"அந்தக்கதையெல்லாம் வேண்டாம்! உடனே பணத்தை அனுப்புங்கள்" என்கிறது "நம்வாழ்வு" என்ற இதழ்.

கிறிஸ்தவரல்லாத ஒருவரால் கிறிஸ்தவ இதழ்களின் தரத்தை ஆராய முடியாது. இது இந்நூலின் மிகப்பெரிய குறைபாடாகும். இதையே ஒரு கிறிஸ்தவர் எழுதியிருந்தால் அதிகம் பயன்பட்டிருக்கும். நூலாசிரியர், கிறிஸ்தவ இதழ்கள் இறையியலைத் தவிர அரசியல், சமூகம், பொருளாதாரம், கலை, இலக்கியம் போன்றவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அதாவது துக்ளக், குமுதம், கல்கி, ராணி போல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதுபோல் தெரிகிறது. இதெல்லாம் கிறிஸ்தவம் என்றால் என்ன என்று புரியாததால் ஏற்படும் குழப்பமாகும். கிறிஸ்தவ இறையியலுக்கும் மனித வாழ்க்கைக்கும் சம்பந்தமில்லை என்று இவர்கள் எண்ணி விடுகிறார்கள். கிறிஸ்தவ இறையியல் நடைமுறை இறையியல். கிறிஸ்துவை விசுவாசித்து, கிறிஸ்தவ வேதத்தை சரியாகப் புரிந்து கொண்டால் மட்டுமே ஒருவரால் கிறிஸ்தவ வாழ்க்கையை சமுதாயத்தில் சிறப்பாக வாழ முடியும். சமூகத்துக்கும் தொண்டு செய்ய முடியும். வேதபூர்வமான கிறிஸ்தவ இறையியல் சமுதாயத்தின் எல்லா அம்சங்களையும் அலசும் இறையியலாகும். நாட்டின் பஞ்சம், பட்டினி, அரசாட்சி, குடும்ப வாழ்க்கை, குடும்பக் கட்டுப்பாடு, ஆண், பெண் உறவு, சாதிச் சிக்கல், மதவெறி என்று கிறிஸ்தவ வேதம் பேசாத பொருளில்லை. கிறிஸ்தவ இதழ்கள் இவைபற்றி வேதபூர்வமாக ஆராய்ந்து, வேதபூர்வமான விளக்கங்களை மட்டுமே தர வேண்டும். கர்த்தர் எந்தக்கண்ணோட்டத்தில் இவையனைத்திற்கும் விளக்கம் கொடுக்கிறாரோ அந்தக்கண்ணோட்டத்தில் மட்டுமே எழுத வேண்டும். வேதத்திற்கு விரோதமான எழுத்துக்கள் கிறிஸ்தவ இதழ்களில் இடம் பெறக்கூடாது. இன்று வெளிவரும் இதழ்களில் உள்ள பெரும் குறைபாடு அவை வேதத்தை அடிப்படையாகக் கொண்டிராமல் இருப்பதுதான். எனவே, அவற்றில் வேதபூர்வமான கிறிஸ்தவ இறையியலுக்கும் இடமில்லாமல் இருக்கிறது. அத்தோடு எழுத்து நடையும் வாசிக்கும் ஆர்வத்தைக் கிளறுவதாக இல்லை. இதை எப்படிக் கிறிஸ்தவரல்லாத இந் நூலாசிரியருக்குப் புரிய வைப்பது?

கிறிஸ்தவப்பணி புரிகிறோம் என்ற பெயரில் தனிமனித வழிபாட்டிற்கும், குப்பையைக் காசாக்கும் கருவியாகவுமே பெரும்பாலான இதழ்கள் செயல்பட்டு வருவதால் கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவர்கள் அல்லாதோரும் கூட இன்று கிறிஸ்தவ இதழ்களைப் பார்த்துக் குழம்பிப் போயிருக்கிறார்கள். நூலாசிரியரான சாமி, இன்றைய கிறிஸ்தவ இதழ்கள் தரமில்லாமல் இருக்கின்றன என்ற கருத்தை நம்முன் வைக்கிறார். வேத அடிப்படையில் அவர் இம் முடிவுக்கு வரவில்லை. இருந்தபோதும் கிறிஸ்தவத்தின் அடிப்படையில் பார்க்கும்போது இம் முடிவுக்கே கிறிஸ்தவர்களும் வருவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# 1 கொரி. 12-14

## (ஆவிக்குரிய வரங்கள் பற்றிய விளக்கம்)

**6**

இதுவரை பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் பதினோறாம், பன்னிரண்டாம் அதிகாரங்களை விபரமாகப் பார்த்த நாம் இவ்விதழில் பதின்மூன்றாம் அதிகாரத்தைப் பார்ப்போம். இவ்வதிகாரத்தை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் ஆவிக்குரிய வரங்களைப்பற்றிப் போதிக்கத் தொடங்கிய பவுல் திடீரென வேறு ஒரு பொருளுக்குத் தாவி "அன்பை"க் குறித்துப் போதிப்பதுபோல் தோன்றலாம். அதாவது ஆவிக்குரிய வரங்களுடன் தொடர்பற்ற ஒரு பொருளைப் பற்றித் திடீரெனப் போதிக்க முற்படுவது போல் தோன்றலாம். இவ்விதமாக சிலர் இப்பகுதியை விளக்க முற்படும்போது பொருள் கூறுவர். ஆனால், அது தவறு. பவுல் தான் கூறவந்த பொருளில் இருந்து விலகவில்லை. உண்மையில் தான் பேச எடுத்துக் கொண்ட பொருளோடு மிகவும் தொடர்புடையதும், அதேவேளை கொரிந்தியர்களின் பலவிதமான குழப்பங்களையும் நிவர்த்தி செய்வதற்குத் தேவையான ஒரு பொருளைப்பற்றியுமே இங்கே பேசுகிறார். அதுதான் அன்பு. ஆகவே, அன்பு இல்லாவிட்டால் வேறு எது இருந்தாலும் பயனில்லை என்பதை விளக்குவதுதான் இப்பகுதியின் நோக்கம்.

அன்பு கிறிஸ்தவனின் குணாதிசயங்களில் ஒன்று. அது இல்லாமல் ஒருவன் கிறிஸ்தவனாக இருக்க முடியாது. அன்போடு கொரிந்தியர்கள் செயல்பட்டிருந்தால் அவர்களுக்கிடையில் பிரச்சனைகள் ஏற்பட்டிருக்காது. ஆவிக்குரிய வரங்கள் கிறிஸ்தவனுக்குக் கொடுக்கப்படும் வரங்கள். கர்த்தர் கிறிஸ்தவனுக்குக் கொடுக்கும் வரங்கள் சபையின் வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டுமானால், கிறிஸ்தவன் தன் குணத்திற்கேற்ப நடந்து (அன்போடு) கொள்ள வேண்டும். அன்பில்லாவிட்டால் எந்த வரத்தாலும் எவருக்கும் நன்மையில்லை. இதைத்தான் இப்பகுதி விளக்குகிறது.

### அன்பு தவிர்க்க முடியாதது

இப்பகுதியின் முதல் மூன்று வசனங்களும் **(13:1-3)** அன்பு தவிர்க்க முடியாதது என்று போதிக்கின்றன. அன்பு இல்லாவிட்டால் எந்தப்பயனுமில்லை என்பதை இப்பகுதி அழுத்தமாக வெளிப்படுத்துகிறது. இம்மூன்று வசனங்களையும் நாம் மிகக் கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வசனங்களுக்கு விளக்கங் கொடுக்க முற்பட்ட பலர், இவற்றின் தன்மையைப் புரிந்து கொள்ளாமல் தவறான முடிவுகளுக்கு வந்துள்ளனர். எந்த மொழியிலும் எழுதப்பட்டுள்ள ஒரு பகுதியைப் புரிந்து கொள்ள முற்படும்போது எப்போதுமே அப்பகுதி எத்தகைய மொழி நடையில் அமைந்துள்ளது என்பதை முதலில் கவனிக்க வேண்டும் என்பது மொழியியலின் அடிப்படைக் கோட்பாடு. இக்கோட்பாட்டை வேதத்தைப் படிப்பதிலும் அவசியம் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் வேதமும் உலக மொழிகளிலேயே எழுதப்பட்டு, மொழிக்குரிய இலக்கண, இலக்கிய அம்சங்களைத் தன்னில் கொண்டுள்ளது. இலக்கண, இலக்கிய ஒழுங்கு முறையற்று, ஏனோ தானோவென்று எழுதப்பட்ட ஒரு நூலாக நாம் வேதத்தைக் கருதக்கூடாது. சிலர் இது கர்த்தருடைய வார்த்தை என்பதால் இதற்கும் மொழி இலக்கண, இலக்கியத்திற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பதுபோல் விளக்கங்கொடுக்க முற்படுகிறார்கள். இத்தகைய தவறான எண்ணங்களை நம்மனதில் இருந்து விலக்கிக் கொள்ள வேண்டும். தமிழில் போதிக்கும் பொறுப்புடையவர்கள் தமிழ்மொழி இலக்கணத்தில் கவனம் செலுத்துவது பயன் தரும்.

இம்மூன்று வசனங்களின் மூலமும் பவுல், அன்பே மேலானது; அன்பே எல்லாவற்றையும் விட உயர்ந்தது; நம்மிடம் எது இருந்தாலும் அது அன்பைவிட உயர்வானதாக இருக்க முடியாது என்று கூறுகிறார். இதுவே இப்பகுதி போதிக்கும் உண்மை. இவ்வுண்மையை பவுல் மொழிக்குரிய இலக்கண, இலக்கிய அழகுடன் வெளிப்படுத்துகிறார். சாதாரண நடையில் இவ்வுண்மையைக் கூறியிருக்க முடியும். ஆனால், அதனை மிக உயர்ந்த முறையில் எடுத்துக் கூற வேண்டுமென்பதற்காக இந்நடையைப் பயன்படுத்தியுள்ளார். இங்கே பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழி நடைக்கு "உயர்வு நவிற்சி அணி" எனறு பெயர். ஆங்கிலத்தில் இதனை Hyperbole என்று கூறுவார்கள் (Rhetorical exaggeration). "ஒரு பொருளை எடுத்துக் கூறும்போது, உள்ளதை உள்ளவாறு கூறாமல் கேட்போர் மகிழும் வண்ணம் அழகுபடப் பன்மடங்கு உயர்வாகப் பெருக்கிக் கூறுவது உயர் நவிற்சி அணி" என்று மொழி இலக்கணம் விளக்குகிறது. அதாவது கூற வந்த பொருளை மிகைப்படுத்திக் கூறுவதாகும். இம்மொழி நடையையே பவுல் இங்கே பயன்படுத்தியுள்ளார். உதாரணத்திற்கு, "மதிதொடுங் கோயில்" என்ற வரியைப் பார்ப்போம். இவ்வரிகள் கோயில் சந்திரனைத்தொடுகிறது என்று பொருள் தரும். ஆனால், சந்திரனைத் தொடுங் கோயிலை நாம் இது வரை கண்டதில்லை. கோயில் மிக உயரமானது என்பதை அழகுபடக் கூறுவதற்காக, அதை உள்ளவாறு கூறாமல் மிகைப்படுத்தி சந்திரனைத் தொட்டுக் கொண்டிருப்பதாக உயர்வுபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இந்நடையைப் பவுல் இங்கு பயன்படுத்துகிறார் என்பதை மனதில் கொண்டு நாம் இப்பகுதியைப் படிக்க வேண்டும்.

## தூதர்கள் மொழியா?

இப்பகுதியின் முதலாவது வசனத்தில் "நான் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும், பேசினாலும் அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்" என்று பவுல் கூறுகிறார். இதைவைத்து சிலர் தூதர் பாஷை என்று ஒன்றிருப்பதாக விளக்கம் கொடுக்கிறார்கள். முதலில் இவர்கள் பவுலின் மொழி நடையைப்புரிந்து கொள்ளவில்லை. பவுல் இவ்வசனத்தின் மூலம் என்னிடம் அன்பு இல்லாவிட்டால் நான் சத்தமிடுகிற வெறும் கைத்தாளம் மட்டுமே என்பதையே கூற வருகிறார். இவ்வசனத்தின் ஏனைய வார்த்தைகளுக்கு எந்தப்பொருளுமில்லை. அவை மிகைப்படுத்திக் கூறுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட வெறும் சொற்கள் மட்டுமே. அன்பு எத்தனைப் பெரியது என்பதைக் காட்டுவதற்காக இவ்விதமாக மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

அந்நிய பாஷைகள் என்பது மனித மொழிகளே. அவை வெறும் ஓசையோ, சத்தமோ அல்ல. "அந்நிய பாஷைகள்" என்ற வார்த்தைகளை நாம் "அந்நிய மொழிகள்" என்று கூறலாம். இதை அநேகர் உணர்வதில்லை. இதைக் குறித்து பின்பு நாம் விளக்கமாகப் பார்ப்போம். கொரிந்தியர் சபையில் சிலர் அந்நிய பாஷையை (மொழிகளை) அக் காலத்தில் பேசினார்கள். ஆகவே, பவுல் நீங்கள் மனித மொழியில் மட்டுமல்ல (அதாவது அந்நிய பாஷையில்), தூதர் மொழியில் பேசினாலும் கூட என்று மிகைப்படுத்திப் பேசுகிறார். இங்கே "தூதர் பாஷை" என்ற வார்த்தைகள் மிகைப்படுத்தலாதலால் அவற்றிற்கு மொழி இலக்கணத்தின்படிப் பொருள் கொடுக்க முற்படக் கூடாது. இங்கேயே பலர் தவறிழைக்கிறார்கள். இவர்கள் தூதர் பாஷை என்பது மிகைப்படுத்திக் கூறப்பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் என்பதைப்புரிந்து கொள்ளவில்லை. இதைப்புரிந்து கொள்ள இன்னுமொரு உதாரணத்தையும் பார்ப்போம். நமது அன்றாடப் பேச்சு வழக்கிலே இப்படியான அநேக மிகைப்படுத்திக் கூறப்படும் வார்த்தைகளை நாம் பயன்படுத்துவது உண்டு. காப்பி, கீப்பி சாப்பிடுகிறீர்களா? என்று கிராமத்து மக்கள் தமிழகத்தில் கேட்பது வழக்கம். இதில் "கீப்பி" என்ற வார்த்தைக்கு எந்தப் பொருளும் இல்லை. அது தாகத்திற்கு ஏதாவது வேண்டுமா? என்று கேட்பதற்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட வார்த்தை. இப்படிப்பல உதாரணங்களை மேற்கோள் காட்டலாம். இம்மொழி நடையையே இங்கும் பார்க்கிறோம். இம்மொழி நடையை எல்லா மொழிகளிலும் பார்க்கலாம்.

> **மனிதனுக்குப் புரியாத வெறும் சத்தங்கள் எழுப்பிய மனித கூட் டம் அந்நிய கடவுள்களை வணங்கிய, கர்த்தரோடு தொடர்பில்லாத கூட்டம் மட்டுமே என்று வேத வரலாற்றைப் பார்க்கும்போது அறிந்து கொள்ள முடிகிறது.**

இனித்தூதர் பாஷை என்று ஒன்று உண்டா என்று பார்ப்போம். பவுல் தூதர்கள் பாஷை பேசினார் என்று கூறுபவர்கள் 2 கொரிந்தியர் 12:2-3 ஐ உதாரணமாகக் காட்டுவார்கள். அங்கே பவுல், தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது, தான் மூன்றாம் வானம்வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும், பரதீசுக்குள் எடுக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததும், வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டேன் என்றும் கூறுகிறார். ஆனால், இப்பகுதி முழுவதையும் கவனமாக வாசித்துப் பார்த்தால் பவுல் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்பாது அவற்றைப்பற்றிப் பேச விரும்பாததைப் பார்க்கலாம். தமிழ் வேதத்திலே "மனுஷர் பேசப்படாததும், வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளை" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகள் மூல மொழியிலே ஒரே வார்த்தையாக உள்ளது (கிரேக்கம் - αρρητα ρημα τα). முறையான ஆங்கில மொழிபெயர்ப்பில் இது "Inexpressible" words என்று இருக்கின்றது. இதனை unutterable words அல்லது unspeakable words என்றும் மொழி பெயர்க்கலாம். பவுல் பரதீசில் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட காரியங்களை மனித மொழியில் புரியும்படி விளக்கிக் கூறுவது மிகக்கடினமான காரியம் என்று மட்டுமே இங்கே கூறுகிறார். அப்படியே அவற்றை விளக்க முடிந்தாலும் தனக்கு அவற்றை வெளிப்படுத்தும் அனுமதியில்லை என்றும் பவுல் கூறுகிறார். "It is not lawful for a man to utter - 12:4b" (இவற்றைப் பற்றிப் பேச எனக்கு அனுமதியில்லை) என்று பவுல் கூறிய வார்த்தைகளும் தமிழ் மொழி பெயர்ப்பில் தெளிவாகக் கொண்டு வரப்படவில்லை. இவை பவுலுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருந்தபடியால் அவற்றை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த பவுலுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. பரதீசில் வெளிப்படுத்தப்பட்டவற்றை பவுலால் புரிந்து கொள்ள முடிந்தது. தன் சொந்த மொழியில் பவுலால் அவற்றை விளங்கிக் கொள்ள முடிந்தது. ஏனெனில் பவுலுக்கு புரியக் கூடிய, தெரிந்திருந்த மொழியிலேயே அவை வெளிப்படுத்தப்பட்டன. தனக்குக் கொடுக்கப்பட்டவற்றை பிறருக்கு வெளிப்படுத்தத் தான் தனக்கு அனுமதி இல்லையே தவிர, தான் புரிந்து கொள்ள முடியாத மொழியில் அவை இருக்கவில்லை என்று பவுல் கூறவில்லை. இவை பவுலுடைய நன்மைக்காக தனிப்பட்ட விதத்தில் கொடுக்கப்பட்டவையாக இருந்தபடியால், இவற்றை வெளிப்படுத்தும் அதிகாரமும், உரிமையும் பவுலுக்கு இருக்கவில்லை என்று ஜோண் கல்வின் கூறுகிறார். இதைத்தான் It is not lawful for a man to utter என்ற பவுலின் வார்த்தைகள் விளக்குகின்றன. தமிழில் இது "மனுஷன் பேசப்படாததும்" என்று மட்டும் இருக்கின்றது. இதைப் பற்றிப் பேசுவதற்கு மனிதனுக்கு அனுமதி யில்லை என்று மொழி பெயர்த்திருக்க வேண்டும். ஆகவே, இப்பகுதியை வைத்துக்கொண்டு பவுலுக்கு தேவ பாஷை அல்லது தூதர் பாஷை தெரிந்திருந்தது என்று கூறுவது மதியீனம்.

அப்படியே, பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டவை புரிந்து கொள்ள முடியாத பாஷையில் இருந்தன என்றும், அவற்றை வெளிப்படுத்தத்தான் பவுலுக்கு அனுமதியில்லை என்றும் ஒரு வாதத்துக்காக மட்டும் எடுத்

துக் கொண்டாலும், இப்பகுதியின் போதனையின்படி அத்தகைய புரிந்து கொள்ள முடியாத பாஷையில் உலகத்தில் பேச ஒருவருக்கும் அனுமதியில்லை. ஏனெனில் பவுல் இதைப்பற்றிப் பேசத் தனக்கு அனுமதியில்லை என்று உறுதியாகத் தெரிவிக்கிறார். ஆகவே, பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டத்தார் மனிதர்களுக்கு புரியாத பாஷைகளில் பேச வேதம் அனுமதி அளிக்கவில்லை. எனவே, தூதர் பாஷை என்று ஒன்று இருப்பதாக இப்பகுதியை வைத்துத் தீர்மானிக்க முடியாது. மேலும் தூதர்கள் மனிதர்களோடு பேசிய ஒவ்வொரு தடவையும் அவர்கள் பேசியவற்றை மனிதர்கள் புரிந்து கொண்டதாகத்தான் வேதம் தெரிவிக்கிறது. ஆகவே, தூதர்கள் மனிதனோடு பேசியபோது மனிதன் பேசிய மொழிகளிலேயே அவனோடு பேசியிருக்கிறார்கள். மனிதன் தூதர் பாஷையில் பேச முடியும் என்று கூறுவது முட்டாள்தனம்.

பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டத்தார் இன்று அந்நிய பாஷை என்ற பெயரில் வெறும் ஓசையை மட்டுமே எழுப்புகிறார்கள். வெறுமனே எழுப்பப்படும் சத்தங்கள் மொழிகளாகிவிட முடியாது. அவற்றை தூதர் பாஷை என்று கூறித் தப்பிவிட முடியாது. மனிதனுக்குப் புரியாத வெறும் சத்தங்கள் எழுப்பிய மனித கூட்டம் அந்நிய கடவுளர்களை வணங்கிய, கர்த்தரோடு தொடர்பில்லாத கூட்டம் மட்டுமே என்று வேத வரலாற்றைப் பார்க்கும்போது அறிந்து கொள்ள முடிகிறது. கர்த்தரை அறிந்து கொண்ட மனிதர்கள் அவரை உலகம் அறிந்த மொழிகளிலேயே ஆராதித்துள்ளார்கள். கர்த்தரும் மனிதனோடு பேசிய காலங்களில் மனிதனுக்குப் புரிந்த மொழிகளிலேயே பேசியுள்ளார்.

இம்முதலாம் வசனத்தின் அடிப்படை மொழி நடையை நாம் புரிந்து கொண்டால் இப்பகுதியின் 2ஆம், 3ஆம் வசனங்களைப் புரிந்து கொள்வது இலகு. ஏனெனில், அங்கே பவுல் இதே மொழி நடையைப் பயன்படுத்தி அன்பு எல்லாவற்றையும்விட எவ்வளவு உயர்ந்தது என்ற உண்மையையே தொடர்ந்து போதிக்கிறார். ஆகவே, பவுல் மனிதன் தூதர் பாஷையில் பேச முடியுமென்றோ, சகல இரகசியங்களையும் அறிந்து கொள்ள முடியுமென்றோ, மலைகளைப் பெயர்க்க முடியுமென்றோ, தன் சரீரத்தை சுட்டெரிக்க வேண்டுமென்றோ இங்கு போதிக்கவில்லை. இச்சொற்றொடர்கள் அனைத்தும் பேச எடுத்துக்கொண்ட உண்மையை வலியுறுத்திப் போதிக்கப் பயன்படுத்தப்பட்ட மிகைப் படுத்திக் கூறும் வார்த்தைப் பிரயோகங்கள் மட்டுமே.

*(வளரும்)*

---

***(தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள் – பதினாறாம் பக்கத் தொடர்ச்சி)***

தவ இலக்கியங்கள் ஆய்வுத் திறனையும், எழுத்து நடையையும், இலக்கணச் சுத்தத்தையும் கொண்டமைந்தவையாக இருக்க வேண்டும். இந்நான்கு அம்சங்களையும் கொண்டமையாதவற்றைக் கிறிஸ்தவ இலக்கியங்களாகக் கருத முடியாது. தமிழிலுள்ள ஏனைய இலக்கியங்களுக்கு இந்த விதிமுறைகள் அவசியமில்லாவிட்டாலும், ஓரிலக்கியம் கிறிஸ்தவ இலக்கியமாக அமைய இவ்விதி முறைகள் அவசியம் தேவை என்பதை வேதம் சுட்டிக் காட்டுகின்றது.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது என்னைப் பொறுத்தவரையில், நான் தேடிப்பார்த்தும், என் கைக்குக் கிடைத்தவற்றை வாசித்தும் பார்த்ததில் குறிப்பிடத்தக்க சில கிறிஸ்தவ உரைநடை இலக்கியங்கள் தமிழில் இருக்கத்தான் செய்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இவற்றில் அநேகமானவை மொழி பெயர்ப்பு இலக்கியங்களாக உள்ளன. இவை மூலத்தின் சாரத்தை மட்டுமே தன்னில் கொண்டுள்ளது ஒரு குறைபாடு. எழுத்து நடையிலும் இவை வளம் பெற வேண்டிய நிலையில் உள்ளன. இருந்தபோதும் தற்போதுள்ள சூழ்நிலையில் இவற்றை நாம் பயன்படுத்திக் கொள்வது அவசியம். இவற்றில் அநேகமானவற்றை சென்னையில் இருக்கும் தமிழ் பாப்திஸ்து வெளியீடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் (முகவரி: 4. கெல்லீஸ் வீதி, கீழ்ப்பாக்கம், சென்னை 600 010). இம் முகவரிக்கு எழுதினால் அவர்கள் நூல்களின் பட்டியலை அனுப்பி வைப்பார்கள். இவர்கள் வெளியிட்டுள்ள நூல்கள் ஜோண் கல்வின், ஜோண் ஓவன், பிளேவல், ஜொனத்தன் எட்வர்ட்ஸ், வின்ஸ்லோ போன்ற சீர்திருத்தவாத, பியூரிட்டன்களின் நூல்களின் மொழி பெயர்ப்பாக உள்ளன. அத்தோடு ஏ. டபிள்யூ. பிங்க்கின் நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பிங்க்கின் எழுத்துக்களின் அருமை அதை வாசித்தவர்களுக்குப் புரியும். தற்காலப் போதகர்கள் எழுதிய பழைய, புதிய ஏற்பாட்டின் நல்ல சில வேத விளக்கவுரைகளையும் இவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இதைத்தவிர சென்னை, சுவிஷேச ஊழிய நூல் நிலையமும் சில நல்ல நூல்களை வெளியிட்டுள்ளது. உதாரணத்திற்கு ஜோண் பனியனின் மோட்ச பயணத்தைக் கூறலாம். இவையனைத்தையும் சேர்த்துப் பார்த்தால் இவற்றின் தொகை ஐம்பதைத் தாண்டாது.

இன்று உலகில் உள்ள ஏழுகோடித் தமிழ் மக்கள் மத்தியில் கிறிஸ்தவ இலக்கியம் வளர்ச்சியுறாமல் இருப்பதற்கு நம்சூழலில் காணப்படும் பலவீனமான, வேத அடித்தளமற்ற கிறிஸ்தவ ஊழியங்களும் சபைகளுமே காரணம் என்று ஏற்கனவே பார்த்தோம். வெறும் ஆர்வமும், எதையாவது எழுதிப் பெயர் வாங்க வேண்டும் என்ற உந்துதலும், வேதத்தில் தகுந்த ஞானமற்றவர்களை கிறிஸ்தவ எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இதனால் கடை கடையாக கிறிஸ்தவ இலக்கியம் என்ற பெயரில் குப்பைகளைத்தான் எங்கும் பார்க்க முடிகின்றது. இந்நிலை மாறவேண்டுமானால் முதலில் வேதபூர்வமான கிறிஸ்தவத்திற்கு நம்மத்தியில் அடித்தளமிடப்பட வேண்டும். வேத அடிப்படையில் சபைகள் எழ வேண்டும். ஆவியின் வல்லமையும், வேத சத்தியங்களும் நிறைந்த கிறிஸ்தவ பிரசங்கங்கள் ஊர் தோறும் பிரசங்கிக்கப்பட வேண்டும். வேதத்தில் ஊறித் திளைத்து, போலிகளை இனங்கண்டு கொள்ளக் கூடிய கிறிஸ்தவ ஆத்துமாக்கள் உருவாக வேண்டும். இவையெல்லாம் ஏற்படுமானால் அத்தகைய சூழல் நல்ல இலக்கியங்கள் வளரக்கூடிய ஒரு நிலைமையை நிச்சயம் உருவாக்கும். பதினோறாம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க சபையின் கட்டுக்குள் இருந்து வேதத்தைப் படிக்க வழியில்லாமலும், அதேநேரம் அதைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் இதயத்தில் தாங்கி நின்ற மக்கள், லூதரைக் கர்த்தர் பயன்படுத்தி வேதத்தையும், பல வேத அருளுரைகளையும் வெளியிட்ட போது, தமக்குத் தடையாக இருந்த வேலிகளைச் சுக்கு நூறாக்கி அந்நூல்களை வாங்கிப் படித்து கிறிஸ்துவில் வளர்ந்தார்கள். இதே வகையில் நம்மக்களுக்கு வேதத்தைப்படிக்க வேண்டும், அதை மட்டுமே நம்ப வேண்டும் என்ற ஆர்வம் எழும்வரை நல்ல கிறிஸ்தவ இலக்கியங்கள் நம்சூழலில் உருவாவது சுலபமில்லை.



# சிந்தனை முத்துக்கள்!

## ஸ்பர்ஜனின் அறிவுரை!



போதகர்கள் எப்போதும் வசனத்தை தெரிந்து கொள்ளவும், பிரசங்கத்தைத் தயார் செய்யவும் முயல வேண்டும். ஒரு மணி நேரத்தையாகிலும் வீணாக்கக் கூடாது. திங்கட்கிழமை காலை முதல் சனிக் கிழமை இரவு வரை ஏனோ தானோவென்று காலத்தைக் கழித்து விட்டு வாரத்தின் முடிவுக்கு இரண்டொரு மணி நேரத்திற்குமுன் ஒரு தூதன் வந்து வாக்கியத்தைக் கொடுப்பான் என்று நினைக்கிற பிரசங்கி தேவனை பரீட்சை செய்கிறான். அப்படிப்பட்டவன் ஒய்வு நாளில் ஊமையாய் நிற்கவே தகுதியுடையவன். போதகர்கள் இரவும் பகலும் காவலுக்கு நிற்கிற காவற்காரர்களைப்போல் இருக்க வேண்டியவர்களானபடியால் தங்கள் கடமை முடிந்தது; இனிச் சும்மாயிருக்கலாம் என்று சொல்ல முடியாது. அவர்களுக்கு விடுதலையுமில்லை. பிரசங்கம் ஆயத்தம் செய்வதே போதகரின் முதல் வேலையாக இருப்பதால் அவர் இதை அலட்சியம் செய்தால் தனக்கும் தனது ஊழியத்திற்கும் கேடு வருவித்துக் கொள்வார். தேனீக்கள் காலை தொடங்கி மாலைவரை தேன் சேகரிப்பதுபோல் போதகர்கள் தமது மக்களுக்காக ஓயாமல் ஞான ஆகாரத்தை சேகரிக்க வேண்டும். வாக்கியங்கள் பலமாய் நமது மனத்தில்படும்போது அவற்றைக் குறித்துக்கொள்ள ஒரு கைப் புத்தகத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.

“முதலாவது தன் சொந்த இருதயத்துக்கே பிரசங்கியாதவன், மற்றவர்களுக்கு சரியாய் பிரசங்கிக்க முடியாது” என்று ஜோண் ஒவன் சொல்லியிருக்கிறார். தனக்குப் போதனை செய்வது மிகக் கடினம். நமது ஊழியம் பலன் தர வேண்டுமானால் நமது பக்தி விருத்தி அடைய வேண்டும். பக்தி சிறக்க வேண்டும். பக்தியில் பழக வேண்டும். போதகருடைய தேவபக்தியாகிய புத்துயிர் எவ்வளவு செழிக்கிறதோ, அவ்வளவுக்கு அவருடைய ஊழியம் செம்மையாக நடக்கும்.

*(“ஸபர்ஜன் அறிவுரைகள்” நூலிலிருந்து – சுவிஷேச ஊழிய நூல் நிலையம், சென்னை, தமிழ்நாடு)*

## ஆத்துமாக்களுக்கு ஏற்ற பிரசங்கம்



நமது பிரசங்கங்கள் ஆத்துமாக்களுக்கேற்றதாக இருக்க வேண்டும். ஸ்பர்ஜன் இது பற்றிக் கூறும்போது, "அவர்களுடைய கவனத்தை நாம் கவர வேண்டும்; இல்லாவிட்டால் அவர்களுடன் நாம் ஒன்றும் செய்ய முடியாது. உயில் வாசிக்கப்படும்போது உறங்கப்போன ஒருவனைப் பற்றி நாம் கேள்விப்பட்டதில்லை. தன்னைப்பற்றிய ஆர்வம் ஒருவனுடைய கவனத்தை ஈர்க்கும்" என்கிறார். இன்றைய பிரசங்கங்களில் அநேகமானவை சுவாரஸ்யமற்றதாகவும், பிரசங்கி எதைச் சொல்லவருகிறார் என்று நம்மால் ஏற்கனவே ஊகிக்கக்கூடியவனவாகவுமே இருக்கின்றன. அவற்றை சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. அப்பிரசங்கங்கள் அவர்களுடைய வாழ்க்கையை எந்த விதத்திலும் தொடுவதாயில்லை.

நமது பிரசங்களைக் கேட்க மறுக்கும் ஆத்துமாக்களுக்கு நாம் துணை செய்யமுடியாது. ஆகவே, அவர்கள் நமது பிரசங்கத்தைக் கேட்கும்படியாக எம்மால் முடிந்த அனைத்தையும் நாம் செய்யப் பார்க்க வேண்டும். அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பது நமது இலட்சியமாக இருக்க வேண்டும். அவர்களுடைய இருதயத்திற்குள் நுழைந்து அவர்களுடைய இடத்தில் இருந்து அவர்கள் எதை நம்மிடம் இருந்து எதிர் பார்க்கிறார்கள் என்று அறிந்து பிரசங்கிக்க வேண்டும். இப்படிக் கூறுவதால் ஆத்துமாக்கள் கேட்பதை நாம் அவர்களுக்குக் கொடுப்பதுதான் நமது கடமை என்று தவறாக எண்ணிவிடக்கூடாது. இதையே அநேக Seeker sensitive பிரசங்கிகள் செய்து வருகிறார்கள். நான் கூற வருவது இத்தகைய பிரசங்கத்தையல்ல. ஆத்துமாக்களின் தேவை இரட்சிப்பு. அதை அவர்கள் உணராதிருக்கிறார்கள். அதைப்போதிக்கும் பிரசங்கத்தை அவர்கள் கேட்கவும் மறுக்கலாம். ஆனால், அது மட்டுமே ஆத்துமாக்களின் நோயைத் தீர்க்கும் என்ற வைத்தியனின் வைராக்கியத்தோடு, இரட்சிப்புபற்றிய செய்தியே அவர்களுடைய நோய்க்குத் தேவையான மருந்து என்று, அதை அவர்கள் அருந்தும்படிச் செய்வதே ஆத்துமாக்களுக்கேற்ற பிரசங்கம். ஆத்துமாக்களின் தேவை என்ன என்பது நமக்குத் தெரியும். அவர்களுடைய நோய்க்கான காரணங்களும், அதன் அறிகுறிகளும் நமக்குத் தெரியும். ஆத்துமாக்களை விட அதைப்பற்றி அதிகம் அறிந்தவர்கள் நாமே. ஆகவே, நோயாளியின் நோயை முதலில் அவனுக்கு விளக்கி, அதில் இருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளையும், அவன் அருந்த வேண்டிய மருந்தையும் கொடுப்பவனே ஆத்துமாக்களின் கவனத்தை ஈர்த்து, பொருத்தமான பிரசங்கத்தை அளிக்கக்கூடிய பிரசங்கி.

*(எட்வர்ட் டொனலி என்ற போதகரின் Peter - Eyewitness of His Majesty என்ற ஆங்கில நூலில் இருந்து எடுக்கப்பட்டது. இது ஒரு Banner of Truth வெளியீடு)*

## வாசகர்கள் கவனத்திற்கு

**உங்கள் முகவரி மாறும்போது நீங்கள் புதிய முகவரிக்குப் போகுமுன்பே சரியான முகவரியை எமக்கு எழுதி அனுப்பத் தவறாதீர்கள். சரியான முகவரி இல்லாததால் திரும்பிவரும் பத்திரிகைகளால் வீண் செலவு ஏற்படுவதோடு உங்களுக்கும் பத்திரிகை தொடர்ந்து கிடைக்காமல் போகலாம். நன்றி! — ஆசிரியர்**

# எண்ணங்கள்!

வேதத்திலுள்ளவைகளை ஆணித்தரமாக எடுத்துக் கூறி, தீபமாக எறிந்து, எங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு வெளிச்சம் காட்டும் ஒளியாகத் திகழும் தீபமே, உன் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படுகிறது என்பதை நினைத்து சபையாக நாங்கள் உனக்கு நன்றி கூறிகிறோம்.

*பாஸ்டர் எஸ். செல்வம், தமிழ்நாடு*

தீபம் இதழின் பெரிதான சேவைக்காக ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். என்னுடைய நண்பன் மூலமாக ஒரு சில மாதங்களாகத் தொடர்ந்து பத்திரிகையைப் படித்து வருகின்றேன். அதில் தவறான கோட்பாடுகளை நீங்கள் விளக்கிக் கூறிய பாங்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. நான் பணி செய்யும் திருச்சபையில் நீங்கள் கொடுக்கும் போதனைகளைப் பகிர்ந்து கொள்கிறேன். இன்னும் அநேக மக்கள் தீபத்தை வாசிக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறேன். சரியான சத்தியத்தின் பாதையில் ஒரு மனிதன் வாழ்வதற்கு பத்திரிகை பேருதவியாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

*பாஸ்டர் ஜே. வில்சன், தமிழ்நாடு*

கடந்த பதின்மூன்று வருடங்களாக பலதரப்பட்ட பத்திரிகைகளைக் கண்டும் வாசித்துமிருக்கிறேன். ஆனால், இதைப்போன்ற வெளியீடுகள் மிகக்குறைவு; ஏறக்குறைய இல்லை என்றே சொல்லலாம். ஊழியத் திற்கும், தனிப்பட்ட வாழ்க்கைக்கும் நல்ல வழிகாட்டியாகவும், வெளிச்சமாகவும் ஊன்று கோலாகவும் பயன்படும் என்று நம்புகிறேன். உங்கள் பணி சிறக்க ஜெபிக்கிறேன்.

*பாஸ்டர் எல். பிரேம் மோகன், அந்தமான்-நிக்கோபார் தீவுகள்*

நண்பர் ஒருவர் மூலமாக பத்திரிகையை வாசிக்க முடிந்தது. பதினான்கு வருடங்களாக நான் அறிந்திராத சத்தியத்தின் ஆழமான கருத்துக்களை அறிந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். குடும்பம் ஒரு ஆலயம், குடும்ப ஆராதனை, சிறந்த பிள்ளை வளர்ப்பு ஆகிய ஆக்கங்கள் ஆசீர்வாதமாக இருந்தன. எனக்கும் பத்திரிகையை அனுப்பி வையுங்கள்.

*பாஸ்டர் டேவிட் சந்திரதாஸ், தமிழ்நாடு*

பத்திரிகை கிடைத்தது. இத்தகைய அரிய பத்திரிகையை நமது சொந்த மொழியில் வாசிக்க முடிவது பெரும் பாக்கியம். சீர்திருத்தவாத போதனைகள் இன்று அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கும். இதைத் தயாரித்து வெளியிட நீங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளுக்கும் எனது நன்றி.

*ஆர். இராஜபிரபு. ஸ்ரீலங்கா*

*(எண்ணங்கள் பகுதியில் வரும் கடிதங்களை நாம் வரவேற்கிறோம். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் உங்களை, உங்கள் கடிதங்கள் மூலமாகவே நாம் அறிந்து கொள்கிறோம். தனிப்பட்டவர்களினதும், சபைகளினதும் ஆத்மீகத்தேவைகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது. உங்கள் மடல்களும், ஜெபங்களும் எம்மை இப்பணியில் ஊக்குவிக்கின்றன. நன்றி. – ஆசிரியர்)*

## உள்ளே . .

குடும்பத் தலைவன்
2. குடும்ப ஆராதனை
வேண்டும் இன்று விழிப்புணர்வு!
4. கிறிஸ்தவக் கோட்பாடுகள்
ஜோண் நொக்ஸ்
6. வில்லியம் கேரி
திரித்துவம்
தமிழில் கிறிஸ்தவ இலக்கியம்
தமிழில் கிறிஸ்தவ இதழ்கள்
10. 1 கொரி. 12-14
சிந்தனை முத்துக்கள்!
12. எண்ணங்கள்!